# வானவில்

# VAANAVIL

இதழ் - 92 ISSUE – 92

ஆவணி 2018 AUGUST 2018



# மாகாண சபைத் தேர்தலில் தமிழ் பிற்போக்கு இனவாத சக்திகளைத் தோற்கடிக்க வேண்டும்!

பதவிக்காலம் முடிவடைந்த சில மாகாண சபைகளுக்கு உரிய காலத்தில் தேர்தல் நடத்தாது அரசாங்கம் இழுத்தடித்து வருகிறது. இதே நேரத்தில் வட மாகாண சபை உட்பட வேறும் சில மாகாண சபைகளின் பதவிக் காலமும் இவ்வருட இறுதியில் முடிவடைய இருக்கின்றது. அவற்றின் தேர்தல்களும் உரிய காலத்தில் நடைபெறுவதற்கான வாய்ப்பில்லை எனத் தெரிகிறது.

இப்போதைக்கு மாகாண சபைத் தேர்தல்களை அரசாங்கம் நடத்தாது என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சூசமாகச் சொல்லியும் விட்டார். சில நாட்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்த பிரதமர், மாகாண சபைத் தேர்தல்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பனவற்றுக்கு முன்னதாக நடத்தப்படும் எனச் சொன்னார். அடுத்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் எப்பொழுது நடைபெறும் என்பது அனைவருக்கும் தெரியும். அதன்படி பார்த்தால் இன்னும் இரண்டு வருடங்களுக்கு மாகாண சபைத் தேர்தல் இல்லை என்பது புலனாகும்.

சில வேளைளில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் கூட உரிய காலத்தில் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை அரசாங்கம் நடத்தாமல் இழுத்தடிப்பதற்கு பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றது. அதில் முக்கியமானது பழைய முறையிலா அல்லது புதிய முறையிலா நடத்துவது என்பது. புதிய முறையில் நடத்தினால் அது சிறுபான்மை இனங்களுக்குப் பாதிப்பை




உண்டாக்கும் என அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் சில தமிழ் கட்சிகள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. ஜே.வி.பி. ஒரு குட்டி முதலாளித்துவ சிங்கள தேசியவாதக் கட்சி என்ற போதிலும் அதுவும் கூட புதிய தேர்தல் முறைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

ஆக, எதிர்க்கட்சிப் பதவியை வைத்துக்கொண்டு, அதனால் வரும் சுகபோகங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிற தமிழரசுக் கட்சி ஒரு தேசிய சிறுபான்மை இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய போதும், ஐ.தே.க. அரசாங்கத்துடன் உள்ள வர்க்க – அரசியல் ஐக்கியம் காரணமாக புதிய தேர்தல் முறைக்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல், மாகாண சபைத் தேர்தலை இழுத்தடிப்பதை எதிர்க்காமல் மௌன அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்கம் மாகாண சபைத் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தாமல் இழுத்தடித்து வருவதற்கு தேர்தலை பழைய முறையில் நடத்துவதா அல்லது புதிய முறையில் நடத்துவதா என்ற நடைமுறைப் பிரச்சினைகளை விட, அரசியல் ரீதியான காரணமே பிரதானமானது. அதாவது தேர்தலை நடத்தினால் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் படுமோசமான தோல்வியைச் சந்திக்கும் என்பதே காரணமாகும். இது எல்லோருக்கும் தெரிந்த இரகசியமாகும்.

நாம் முன்னரே சில தடவைகள் சுட்டிக் காட்டியது போன்று, இந்த அரசாங்கம் பதவிக்கு வந்து சில மாதங்களிலேயே மக்களிடம் செல்வாக்கை இழந்துவிட்டது. (அதற்குப் பல காரணங்கள், அதை அலசுவதல்ல இக்கட்டுரையின் நோக்கம்) அது அரசாங்கத்துக்கும் தெரிந்த காரணத்தால்தான், தமக்கு மக்கள் மத்தியில் என்ன நிலை இருக்கிறது என்று அறிவதற்கு தென்னிலங்கையில் சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்திப்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

**நூறு சிந்தனை மலரட்டும்**

# போதைப்பொருள் கடத்தலும் மரணதண்டனையும்

தடைசெய்யப்பட்ட போதைப்பொருட்களைக் கடத்துவதில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு தண்டனையை அமுல்படுத்தப்படுத்தப் போவதாக இலங்கையில் கடந்த மாதம் அறிவிக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் மீதான பாலியல் வன்முறைகள், கொலைகள், போதைப்பொருள் கடத்தலும் விற்பனையும், பாதாளக் குழுக்களுக்கிடையேயான சண்டைகள் போன்ற சமூக விரோதச் செயல்கள் இலங்கையில் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. இவற்றினைத் தடுப்பதற்காக மரணதண்டனையை மீளறிமுகஞ் செய்ய வேண்டுமென கடந்த மூன்று வருடங்களாக இலங்கைப் பாராளுமன்றத்தில் விவாதங்கள் நடைபெற்று வந்தன. இந்நிலையில் 10.07.2018 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், போதைப்பொருள் தொடர்பான குற்றச்செயல்களில் மரணதண்டனை விதிக்கப்பட்ட 19 பேருக்கு தண்டனையை நிறைவேற்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தினை எதிர்த்தும் ஆதரித்தும் கருத்துக்கள் வெளியாகிய வண்ணமுள்ளன. உலகளாவிய ரீதியில் மரணதண்டனையை எதிர்க்கும் ஐரோப்பிய ஒன்றியம், மரணதண்டனையை மீளறிமுகஞ் செய்ய வேண்டாமென இலங்கையை பகிரங்கமாக எச்சரித்துள்ளது. மரணதண்டனை அமுலுக்கு வந்தால், இலங்கையுடனான உறவுகளில் பாதிப்பு ஏற்படுமென்பதே இந்த எச்சரிக்கை வெளிப்படையாக உணர்த்தி நிற்கின்றது. இலங்கையில் 42 வருடங்களுக்கு முன்னரேயே இறுதியாக மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. 42 வருடங்களின் பின்னர் இப்போது மரணதண்டனையை அமுல்படுத்த வேண்டுமென்ற முடிவுக்கு வந்துள்ளதென்பது, நாட்டில் குற்றச்செயல்கள் உச்ச நிலையை அடைந்துள்ளது என்பதையே தெளிவாகக் கோடிட்டுக் காட்டுகின்றது. பல்வேறு குற்றச்செயல்களுக்காக மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள 1200 கைதிகள் தற்போது இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மரணதண்டனை என்பதன் மூலம் ஓர் உயிர் அழிக்கப்படுகின்றது – அதாவது உயிரை எடுப்பதற்கு எவருக்கும் அதிகாரமில்லை, மரணதண்டனையால் குற்றங்கள் குறைந்ததாக ஆதாரங்கள் எதுவுமில்லை, குற்றம் புரியாத அப்பாவிகளும் மரணதண்டனைக்கு உள்ளாக்கப்படலாம் - அவ்வாறான சந்தர்ப்பத்தில் போன உயிரை திரும்பப்பெற முடியாது போன்ற இன்னோரன்ன காரணங்கள் மரணதண்டனைக்கு எதிராக முன்வைக்கப் வைக்கப்படுகின்றன. மரணதண்டனைக்குப் பதிலாக ஒருவரை உயிருடன் சிறையில் வைத்திருப்பதன் மூலம், ஒருவேளை அவர் நல்வழிப்படுத்தப்பட்டு திருந்துவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன எனவும் அதனை நிறுத்த வேண்டுமென கோருபவர்கள் முன்வைக்கிறார்கள்.

மரணதண்டனையை நிறைவேற்றுவதின் மூலம் போதைப்பொருள் கடத்தலை மாத்திரமன்றி, எந்தவொரு குற்றச்செயலையும் தடுத்து நிறுத்தமுடியாது என்பதில் உண்மை இருக்கின்றது. இப்போது போதைப்பொருள் கடத்தல் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு மரணதண்டனையை எதிர்நோக்கி இருப்பவர்களும் உண்மையான குற்றவாளிகளா என்பதற்கும் எந்த ஆதாரங்களும் கிடையாது. போதைப்பொருள் கடத்தலின் பிரதான சூத்திரதாரிகள் எப்போதுமே திரைமறைவிலேயே இருப்பார்கள். இவர்கள் அரசாங்கத்தில், அரச பாதுகாப்புச் சேவைகளில் பெரிய பதவிகள் வகிப்பவர்களாகக்கூட இருக்கலாம். இந்த மாதிரியானவர்களின் அனுசரணைகள் இல்லாமல் ஒருபோதும் உலகில் எந்த நாட்டிலும் போதைப்பொருள் கடத்தல் குற்றச்செயல்கள் நிகழ்வதில்லை. எனவே இவர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன்னால் நிறுத்தாத வரையிலும் குற்றச்செயல்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கும். இதனை முன்னிறுத்தியே, சட்டமென்பது வலியவர்களை தப்ப விட்டுவிட்டு, எளியவர்களை சிக்க வைக்கின்றது என சட்டங்களை எதிர்க்க வேண்டும் என்பவர்களின் வாதமாக இருக்கின்றது. ஆனால் அவ்வாறு வாதிடுபவர்களும், சட்டங்கள் என்று ஒன்றே இல்லாவிட்டால் எளியவர்களுக்கு ஒருவிதமான பாதுகாப்பே இல்லாமல் போய்விடும் என்பதால், இறுதியில் சட்டங்களின் இருப்பை, அவசியத்தை ஏற்றுக்கொள்கின்றனர்.

மனித உடலுக்கு ஹெரோயின், ஹொக்கையின், மர்ஜுவான, ஓப்பியம், கஞ்சா, அபின், பலவித போதைக்குளுசைகள் மாத்திரம் போதையைத் தருவன அல்ல, மதுபானம், சிகரெட், பீடி, சுருட்டு போன்றவைகளும் ஒருவித போதையைத் தருகின்றன. ஆனால் பின்னாலுள்ளவற்றைக் காட்டிலும் முன்னாலுள்ளவையே உடலுக்கு அதிகம் தீங்கு விளைவிப்பதால், பொதுவாக உலகெங்கிலும் தடை செய்யப்பட்டுள்ளன. இந்தத் தடை இருப்பதன் காரணத்தால்தான் போதைப்பொருட்களைக் கடத்தி ஏராளமாகப் பணம் சம்பாதிக்கப்படுகின்றது. இவ்வாறு சட்டவிரோதமாகப் பணம் சம்பாதிப்பதைத் தடுப்பதற்காகவும், தடைபோடுவதால் இரகசிய போதைப்பொருள் பாவனையாளர்களும் அதிகரித்து வருகிறார்கள் என்பதாலும் சில நாடுகளில் ஒருசில போதைப்பொருட்கள் மீதான தடைகள் நீக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் கனடாவில் கஞ்சா மீதான தடை நீக்கப்பட்டது இதற்கு ஓர் உதாரணமாகும்.

இலங்கையில் தற்போது சகல போதைப்பொருள் பாவனைகளாலும் வருடத்திற்கு ஐம்பது ஆயிரம் பேர் வரையில் இறப்பதாகத் தெரிகிறது. இந்தத் தொகையானது முப்பது வருடகால யுத்தத்தால் வருடாவருடம் இறந்தவர்களைவிட அதிகமானது என்ற உணமையைக் கூறுபவர்களும் இருக்கிறார்கள். யுத்தத்தால் ஒரு சில இடங்களில் தொகையாக இறப்பார்கள். இப்போதுள்ள தகவல் பரிமாற்றம் நிறைந்த உலகில், எல்லோரது கண்களுக்கும் யுத்தத்தால் இறப்பவர்களின் தொகை பெருந்தொகையாகவே தெரியும் ஆனால் போதைப்பொருள் பாவனையால், நாடு தழுவிய ரீதியில் இங்கொன்றும் அங்கொன்றுமாக மடிபவர்களின் எண்ணிக்கையானது எவரது கண்களுக்கும் புலப்படுவதில்லை.

வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ் குடாநாட்டில் போதைப்பொருள் பாவனை மிகவும் அதிகரித்திருப்பதாகத் தெளிவாகத் தெரிய வருகின்றது. இலங்கையில் போதைப்பொருள் பாவனையில் யாழ் மாவட்டமே முதலிடத்தில் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. அத்துடன், இலங்கை அரசாங்கமே இதனை திட்டமிட்டு ஊக்குவிப்பதாகவும் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் இவ்வாறு சொல்பவர்கள் இந்தக் குற்றச்சாட்டிற்கு ஆதரவாக எந்த ஆதாரத்தையும் முன்வைக்காது, ஊகத்தின் அடிப்படையிலேயே சொல்கிறார்கள். யுத்தத்தின் பின்னரான நிலைமைகளால், உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டு போதைகளுக்கு அடிமையாகக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இதனையொரு வடமாகாணத்திற்குரிய பிரத்தியேகமான பிரச்சனையாக மாத்திரம் கருதாது, இது ஒரு நாடு தழுவிய, உலகந்தழுவிய பிரச்சனையாக கருதும் அணுகுமுறை தேவை.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

இணையத்தளம்: http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.

***இலங்கையில் 1953 ஆகஸ்ட் 12ம் திகதி நடைபெற்ற மாபெரும் ஹர்த்தால் போராட்டத்தின் 65வது ஆண்டு நினைவாக இக்கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது.***

# 1953 ஆகஸ்ட் 12 ஹர்த்தால்: வரலாறு பதித்த அழியாத சுவடுகள்

**ந**வீன இலங்கையின் வரலாற்றில், 1953 ஆகஸ்ட் 12ம் திகதி, அன்றைய ஐ.தே.க. அரசுக்கெதிராக இலங்கையின் மக்களால் நடாத்தப்பட்ட மாபெரும் ஹர்த்தால் போராட்டம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்வாகும்.

“அரிசி ஹர்த்தால்” என தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளால் பிற்காலத்தில் எள்ளி நகையாடப்பட்ட இந்தச் சம்பவம், இலங்கை தொழிலாளி வர்க்கத்தை மட்டுமின்றி, சிங்கள – தமிழ் மக்களையும் ஒன்றுபட வைத்த ஒரு நிகழ்வாகும்.

இலங்கை மக்களால் நிகழ்த்தப்பட்ட இந்த மாபெரும் போராட்டம், 1956ல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாநாயக்க தலைமையில் ஒரு ஏகாதிபத்திய விரோத அரசையே உருவாக்க வழிசமைத்தது என்றால் மிகையாகாது.

இன்று சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் என பிளவுபடுத்தப்பட்டுள்ள எமது இலங்கைத் தீவில், மக்கள் விரும்பாத போராட்டங்களை, அவர்களது மன ஒப்புதல் இன்றி, துப்பாக்கி முனையில் நிர்ப்பந்தித்து, போராடும்படி, வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும், மலையகத்திலும் சில சக்திகள் நிர்ப்பந்தித்து வருகின்றன.

ஆனால் 1953 ஹர்த்தாலின்போது, போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்த இடதுசாரி தலைவர்களே, போராட்டத்தின் வீச்சைக் கண்டு மிரட்சியுற்று, போராட்டத்தை வாபஸ் வாங்கும் அளவுக்கு, அணிதிரண்ட மக்கள் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர்.

47 (65) வருடங்களுக்கு முன்னர் நடந்த இந்த மாபெரும் போராட்டத்தின்போது, இலங்கையில் நிலவிய அரசியல் சூழ்நிலையையும் சிறிது கவனத்தில் கொள்வது அவசியமானது.

இலங்கைக்கு 1948 பெப்ரவரி 4ம் திகதி பிரிட்டனால் சுதந்திரம் வழங்கப்பட்டது. அதற்கு முன்னதாக 1947 மே – யூனில் இலங்கையில் இடதுசாரி தொழிற்சங்கங்களின் தலைமையில் மாபெரும் பொது வேலை நிறுத்தம் ஒன்று நிகழ்ந்தது.



***உணவு விலையேற்றத்தை எதிர்த்து ஹர்த்தாலில் ஈடுபட்டுள்ள இளைஞர் குழாம்***

இரண்டாம் உலகப் போர் முடிவுற்றதைத் தொடர்ந்து, பல தொழிற்துறைகளில் ஆட்குறைப்பு, சம்பளக் குறைப்பு, விலைவாசி உயர்வு என்பன ஏற்பட்டதால் தொழிலாளர்கள் மத்தியில் அமைதியின்மை நிலவியது. தமக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் கோரி தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

**குருசேத்திரன்**

அரசாங்கம் கடுமையான சட்டங்களை இயற்றி, வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. தொழிற்சங்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு, தொழிற்சங்க காரியாலயங்களும், இடதுசாரி அச்சகங்களும் சீல் வைக்கப்பட்டன. பொலிஸ் மாத்திரமின்றி, இராணுவமும் வீதிக்கு அழைக்கப்பட்டது. மேலதிகமாக பிரிட்டிஸ் மகாராணியின் கடற்படையும் வீதிகளில் நிறுத்தப்பட்டது.

இன்று தனிப்பட்ட முதலாளிகளால் நடாத்தப்படும் பத்திரிகைகளைப் போன்றே, அன்றும் ஐ.தே.க. முதலாளிகளால் நடாத்தப்பட்ட ஏரிக்கரைப் (லேக்ஹவுஸ்) பத்திரிகைகளும், ஏனைய பத்திரிகைகளும் வேலை நிறுத்தத்தை முறியடிக்க சகல பிரயத்தனங்களும் செய்தன.

**கொலன்னாவையிலிருந்த பிரிட்டிஸ் எண்ணெய் குதங்களை நோக்கி ஊர்வலமாகச் சென்ற தொழிலாளர்களின் ஊர்வலம் ஒன்றின் மீது பொலிஸ் சுட்டதில் கந்தசாமி என்ற தமிழ் அரசாங்க ஊழியர் கொல்லப்பட்டார். அவரது தியாகத்திற்கு அஞ்சலி செலுத்துவதற்காக இன,மொழி, மத பேதமின்றி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கொழும்பு காலிமுகத் திடலில் கூடியதுடன், அவரது பூதவுடலை கோட்டை புகையிரத நிலையத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் சென்று யாழ்ப்பாணத்திற்கும் அனுப்பி வைத்தனர்.**

தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் அரசாங்கத்தையே ஆட்டம் காண வைத்தது. ஒரு கட்டத்தில் வேலை நிறுத்தத்தின உறுதிப்பாட்டைக் கண்டு அஞ்சிய சேர்.ஜோன் கொத்தலாவலை அரசாங்கத் தலைவர் டீ.எஸ். சேனநாயக்காவிடம் சென்று, தொழிலாளர்களின் கோரிக்கைகளை வழங்கும்படி ஆலோசனை கூறியதாகவும், அதற்கு சேனநாயக்கா, “லயனல், நீங்கள் ஒரு இராணுவக்காரன் என்று நினைத்தேன்” என்று கிண்டல் செய்ததாகவும் கூறப்படுகின்றது.

எப்படியிருந்தபோதிலும், அரசாங்கம் கடுமையான அடக்குமுறைகளைப் பாவித்து வேலை நிறுத்தத்தை தோற்கடித்தது. பொலிசார் மிகவும் கடுமையாக நடந்து கொண்டனர். அப்பொழுது பொலிஸ்

துறைக்குப் பொறுப்பான உள்துறை அமைச்சராக ஏ.மகாதேவா என்ற தமிழர் ஒருவரே இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரிட்டிஸ் ஏகாதிபத்தியவாதிகளுக்கும், அவர்களது உள்நாட்டு பிரதிநிதிகளாக இருந்த ஐ.தே.கவுக்கும் எதிரான இந்த மாபெரும் வேலை நிறுத்தம் தோல்வியில் முடிவடைந்தாலும், தொழிலாளி வர்க்கத்தினதும், பொது மக்களினதும் எதிர்ப்புணர்வு எவ்வளவு தூரம் இருந்தது என்பதை அடுத்து வந்த 1947 பொதுத் தேர்தல் எடுத்துக் காட்டியது.

**1947ல் நடந்த பொதுத் தேர்தலில் பெருந்தொகையான தொகுதிகளில் ஐ.தே.கவுக்கு எதிரான வேட்பாளர்கள் வெற்றியீட்டினர்.**

**முக்கியமாக, இந்திய வம்சாவழி மலையகத் தொழிலாளர்கள் வாழ்ந்த பகுதிகளில் ஐ.தே.க. எதிர்ப்பு வேட்பாளர்கள் அமோக வெற்றி பெற்றனர். இதனால் ஏற்பட்ட ஆத்திரம் காரணமாகவே டீ.எஸ்.சேனநாயக்காவின் ஐ.தே.க. அரசு பதவிக்கு வந்தவுடன் முதல் வேலையாக இந்திய வம்சாவழி தொழிலாளர்களின் பிரஜாவுரிமையையும், வாக்குரிமையையும் பறித்தெடுத்தது.**

**இந்த நடவடிக்கையை ஜீ.ஜீ.பொன்னம்பலமும் அவரது தமிழ் காங்கிரசும் பாராளுமன்றத்தில் ஆதரித்து வாக்களித்து அன்று மலையக மக்களுக்குத் துரோகமிழைத்தனர்.**

1947 பொதுத் தேர்தல் முடிவடைந்ததும், அதன் முடிவுகளைப் பார்த்து ஏகாதிபத்தியவாதிகளும், உள்நாட்டுப் பிற்போக்காளர்களும் அதிர்ச்சியடைந்தனர். ஏனெனில், இடதுசாரிக் கட்சிகளின் அமோக வெற்றியானது, அவர்களது தலைமையில் ஒரு அரசாங்கம் அமையக்கூடிய அளவுக்கு இருந்தது.

இடதுசாரிகள் ஐக்கியப்பட்டு, ஏனைய முற்போக்கு – ஜனநாயக சக்திகளும் ஒற்றுமைப்படுத்தப்பட்டு, சிறுபான்மை இனப் பிரதிநிதிகளான சி.சுந்தரலிங்கம், ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்றோரும் கழுத்தறுப்பு வேலைகளில் ஈடுபடாமல் இருந்திருப்பின், சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாக ஒரு ஐ.தே.க. எதிர்ப்பு அரசு அமைந்திருக்க வாய்ப்பிருந்திருக்கும்.

டீ.எஸ்.சேனநாயக்காவின் மறைவுக்குப் பின்னர், 1952 தேர்தலின் மூலம் அவரது மகன் டட்லி சேனநாயக்கா பிரதமரானார். அவரது அமைச்சரவையில் "ஏகாதிபத்திய விசுவாசி" என எல்லோராலும் நன்கறியப்பட்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நிதியமைச்சராகப் பொறுப்பேற்றார்.

**1953ம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஐ.தே.க. அரசின் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த ஜே.ஆர்., நாட்டு மக்கள் மீது பாரதூரமான பொருளாதாரச் சுமைகளைச் சுமத்தினார். பொருளாதார நெருக்கடியிலிருந்து தனது அரசைக் காப்பாற்றும் பொருட்டு, அமெரிக்காவின் தலைமையிலிருந்த உலக வங்கியின் ஆலோசனைகளை ஏற்ற ஜே.ஆர்., அரிசிக்கு இருந்த மானியத்தை வெட்டி, 25 சதமாக இருந்த ஒருபடி அரசியின் விலையை 70 சதமாக உயர்த்தினார். தபால், தந்தி கட்டணங்களை அதிகரித்தார். பாடசாலைப் பிள்ளைகளுக்கு மதிய நேர உணவாக வழங்கிய இலவச 'பணிசை' பறித்தெடுத்தார்.**

இதனால் ஆத்திரமுற்ற பொதுமக்கள், ஐ.தே.க. அரசின் மீது பெரும் கோபாவேசம் கொண்டனர். அரசின் இந்த முடிவுக்கெதிராக இடதுசாரி தொழிற்சங்கங்கள் 1953 ஆகஸ்ட் 12ம் திகதி நாடு தழுவிய ஹர்த்தால் போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்தன.

ஹர்த்தாலுக்கு முன் தயாரிப்பாக நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான பொதுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, பிலிப் குணவர்த்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய 3 இடதுசாரிக் கட்சிகளும், அவர்களது தொழிற்சங்கங்களுமே ஹர்த்தாலை முன்னின்று ஏற்பாடு செய்தன.

ஐ.தே.கவிலிருந்து பிரிந்து வந்து திரு.பண்டாரநாயக்கா அமைத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், தமிழ் காங்கிரசிலிருந்து பிரிந்த திரு.கு.வன்னியசிங்கம் அமைத்த தமிழரசுக் கட்சியும், ஹர்த்தாலில் நேரடியாகப் பங்குபற்றவில்லை. ஆனால் தனது ரோஸ்மீட் பிளேஸ் இல்லத்தில் தன்னைச் சந்தித்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் ஹர்த்தாலுக்கான தனது ஆதரவை பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

**ஹர்த்தாலுக்கான மக்களின் ஆதரவு மிகவும் உணர்வுபூர்வமாகவும், உச்சமாகவும் இருந்தது. இதைக் கண்டு மக்களிடமிருந்து விலகி நிற்க விரும்பாத பண்டாரநாயக்க, ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பு கோல்பேஸ் மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் இறுதிக் கூட்டத்தில் உரையாற்றினார். அதேபோல, யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் இறுதிப் பொதுக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் திரு.வன்னியசிங்கம் பங்குபற்றி உரையாற்றினார்.**

ஒரு துப்பாக்கி தன்னும் இல்லாமல், ஐக்கியப்பட்ட மக்கள் சக்தியினால் இந்த மகத்தான நிகழ்வு ஏற்பட்டது.

அரசாங்கம் பகல் 12 மணிக்கு கலகச் சட்டத்தையும் பின்னர் அவசரகாலச் சட்டத்தையும் பிரகடனம் செய்தது. ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. மக்களைக் கலைப்பதற்காக சுடுவதற்கான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் மக்கள் அஞ்சாது நின்றனர். ஐ.தே.க. அரசின் பொலிசார் செய்த துப்பாக்கிப் பிரோகத்தால் 12 பொதுமக்கள் தமது இன்னுயிரை இழந்தனர்.

**அரசாங்கம் செய்வதறியாது திணறியது. இலங்கைத் தீவின் எந்தவொரு இடத்திலும் தனது மந்திரிசபைக் கூட்டத்தை நடாத்த முடியாத பிரதமர் டட்லி சேனநாயக்கா, கடலில் தரித்து நின்ற பிரிட்டிஸ் யுத்தக் கப்பல் ஒன்றில் தனது மந்திரி சபைக் கூட்டத்தைக் கூட்ட வேண்டிய அவலமான – கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டார்.**

**அதுமாத்திரமின்றி, மக்களின் கோபாவேசத்துக்கு முகம் கொடுக்க முடியாது அஞ்சிய டட்லி, தற்காலிகமாக அரசியலை விட்டு ஒதுங்கி, பௌத்த துறவியாகப் போவதாகக் கூறி நாட்டை விட்டே வெளியேறினார். "இலங்கையில் இடதுசாரிகள் வன்முறையின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டார்கள்" என்ற செய்தி உலகப் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாகியது.**

ஆனால் மறுபக்கத்தில், தொழிலாளர்களினதும் பொதுமக்களினதும் ஐ.தே.கவுக்கு எதிரான எழுச்சி இவ்வளவு தூரம் பிரமாண்டமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்காத இடதுசாரித் தலைவர்கள் செய்வதறியாது திகைத்தனர். நாட்டு மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றக்கூடிய அரசியல் திட்டங்கள் எவையும் அவர்களிடம் இருக்கவில்லை. அதனால் அன்று மாலையே ஹர்த்தாலை வாபஸ் பெறுவதாக அறிவித்தனர்.

இந்தப் பின்வாங்கலைத் தொடர்ந்து வந்த மாதங்களில், அரசு இயந்திரத்தின் கடுமையான அடக்குமுறை நடவடிக்கைகளை தொழிற்சங்க இயக்கமும், இடதுசாரி இயக்கங்களும் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

இந்த ஹர்த்தால் தொழிலாளர்களுக்கோ, மக்களுக்கோ உடனடி நன்மை எதையும் ஏற்படுத்தவில்லை என்பது உண்மையே. ஆனால் இலங்கை வரலாற்றில் பெறுமதிமிக்க பல பாடங்களை இது மக்களுக்கு வழங்கியது. அதில் மிக முக்கியமானது, ஏகாதிபத்தியத்தையும், அதன் உள்ளூர் பிரதிநிதியாகிய ஐ.தே.கவையும் எதிர்ப்பதில் இலங்கை மக்கள் மற்றைய நாட்டு மக்களைவிட சளைத்தவர்கள் அல்ல என்பதை வரலாற்று ஏடுகளில் என்றென்றைக்கும் அழிக்க முடியாதவாறு பொறிக்கப்பட்டது.

இன்னொன்று, மக்கள் எவ்வளவு உற்சாகமானவர்களாக இருந்தாலும், சரியான தலைமைத்துவம் இல்லாதிருப்பின் அவர்களது தியாகங்கள் விழலுக்கிறைத்த நீராகும் என்பது.

1953ம் ஆண்டு ஐ.தே.க. அரசால் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டாலும், புகழ்பூத்த அந்தப் போராட்டத்தின் உணர்வலைகளே 1956ம் ஆண்டு திரு.பண்டாரநாயக்க தலைமையில் பெரும் வெற்றியுடன் எமது நாட்டில் ஒரு ஏகாதிபத்திய விரோத அரசாங்கம் அமைய வழி கோலியது.

1956ம் ஆண்டுத் தேர்தலில் ஐ.தே.க. ஆக எட்டுத் தொகுதிகளில் மட்டும் வெற்றியீட்டிப் படுமோசமாகத் தோற்கடிக்கப்பட்டது. அதே போல இடதுசாரிக் கட்சிகளின் செயற்பாடுகள் அவர்களை வீழ்ச்சியை நோக்கித் தள்ளி இன்றைய அவல நிலைக்கும் இட்டு வந்துள்ளது. மகத்தான ஹர்த்தால் போராட்டம் நடந்து தற்பொழுது 47 (65) வருடங்கள் கடந்துவிட்டாலும், ஐ.தே.கவின் இன்றைய தலைமையும் அதே அடிச்சுவட்டிலேயே தனது அரசியல் பாதையைத் தொடர்கின்றது.

ஆனால் தொழிலாளர்களினதும், பொதுமக்களினதும் நிலைமை மட்டும்….. அவர்கள் தமது முன்னைய ஐக்கியத்தை இழந்து, தலைமை ஏதுமின்றி, திசை தெரியாத பறவைகள் ஆக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், வரலாறுகள் மீண்டும் மீண்டும் நிகழ்வது ஒன்றும் உலக அதிசயமல்ல.

*(இக்கட்டுரை கொழும்பிலுள்ள 'லேக்ஹவுஸ்' நிறுவனத்திலிருந்து வெளியான 'அமுது' மாத சஞ்சிகையின் 2000 ஆகஸ்ட் இதழிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது)*



***ஹர்த்தால் கூட்டத்தில் என்.எம்.பெரேரா உரையாற்றுகிறார்***

# மாகாணசபைத் தேர்தலைத் தடுக்கும் மூன்று சதிகாரர்கள்!

**மா**காண சபைகள் சிலவற்றின் ஆயுட்காலம் முடிவடைந்த போதிலும் அவற்றின் தேர்தல்களை நடத்தவிடாமல் மூன்று சதிகாரர்கள் தடைகளைச் செய்து வருவதாக பொதுஜன பெரமுனவின் தலைவரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்களின் சந்திப்பில் இக்கருத்தை வெளியிட்ட பீரிஸ், அந்த மூவரினதும் பெயர்களையும் வெளியிட்டார். அவர் வெளியிட்ட தகவலின்படி, அந்த மூவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரே அவர்கள்.

பீரிஸ் அவர்களின் கூற்றுப்படி, ஐ.தே.க. தலைவர்களுடன் சேர்ந்து சம்பந்தனும் இந்த ஜனநாயக விரோதச் செயலில் ஈடுபட்டிருப்பது மிகவும் கண்டனத்துக்கு உரியதாகும். உண்மையான எதிர்க்கட்சியினர் இருக்க போலியான எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தனை இந்த 'நல்லாட்சி' அரசாங்கம் வைத்திருப்பது இத்தகைய தகிடுதத்தங்களை மேற்கொள்வதற்குத் தான் என்பது இதிலிருந்து தெரிகிறது.

'தேர்தலை நடத்தினால் தோல்வி காண்போம்' என்ற மனப்பயத்தினால்தான் அரசாங்கம் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாது இழுத்தடித்து வருகிறது என்பது இரகசியமானதல்ல. உள்ளூராட்சித் தேர்தலையும் இவ்வாறுதான் உரிய காலத்தில் நடத்தாது இரண்டரை வருடங்கள் இழுத்தடித்தார்கள். பின்னர் தவிர்க்க முடியாமல் தேர்தலை நடத்திய பொழுது அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் இரண்டும் படுதோல்வியடைந்தன.

"மா புளிப்பது அப்பத்துக்கு நல்லது" என்பது போல, அரசாங்கம் தோல்விப் பயத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்தாது இழுத்தடிப்பது அது அரசாங்கத்துக்கு தோல்விக்கு மேல் தோல்வியைத்தான் கொடுக்கும் என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை. இது அரசாங்கத்துக்கு மட்டுமின்றி, போலி எதிர்க்கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் பொருந்தும். நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் இதற்குச் சான்று.

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாது காலங்கடத்துவதை தொடர்ந்தும் வேடிக்கை பார்த்துவரும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு எதிராக பொதுஜன பெரமுன உயர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யும் எனவும் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# அப்பாடி! பன்னீர்ச்செல்வத்துக்கு இவ்வளவு சொத்துகளா?

**த**மிழகத்தின் துணை முதல்வர் ஓ.பன்னீர்ச்செல்வம் வருமானத்துக்கு அதிகமாக சொத்துக் குவித்ததாக முறைப்பாடுகள் எழுந்து தற்போது விசாரணைகளும் நடைபெற்று வருகின்றன. இந்த விசாரணை முறைப்படி நடந்து பன்னீர்ச்செல்வத்துக்கு தண்டனை கிடைக்குமா என்பது சந்தேகத்துக்குரிய ஒன்று. ஏனெனில் தமிழகத்தை ஆட்சி செய்த மு.கருணாநிதி, ஜெயலலிதா போன்றவர்களும் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாக்களை பொதுச் சொத்திலிருந்து திருடியதாக பல வருடங்களாக முறைப்பாடுகள் இருந்தும் பெரிதாக ஒன்றும் நடந்துவிடவில்லை.

தமிழகச் சூழல் இப்படி இருக்கையில் அண்டை மாநிலமான கேரளாவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி தோழர் பினராயி விஜயன் தலைமையில் ஆட்சியில் இருக்கிறது. அந்த அரசு மக்கள் நலன் சார்பாக பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பது அனைவரும் அறிந்த செய்தி. அந்த வரிசையில் தற்பொழுது அந்த அரசில் அமைச்சர் பதவி வகிப்பவர்கள் தாமாகவே முன்வந்து தமது சொத்து விபரங்களை முகநூலில் வெளியிடவுள்ளதாக அறிவித்திருக்கின்றனர். இது தமிழக திராவிட அரசியல்வாதிகளுக்கும், மலையாள கம்யூனிச அரசியல்வாதிகளுக்கும் இடையில் உள்ள மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு.

ஓ.பன்னீர்செல்வம் சேர்த்துள்ள சொத்துக்களின் ஒருபகுதி விபரம் இளமுருகன் சபாரத்தினம் என்பவரால் வெளியிடப்பட்டிருக்கிறது. அவரது சொத்துக்களின் ஒருபகுதியைப் பார்க்கவே தலைசுற்றுகிறது. அவரதே இப்படியென்றால், அவரைவிட பெரிய பெரிய தமிழக அரசியல்வாதிகளின் சொத்துக்களின் தொகை எப்படி இருக்குமோ?

**தேனி மாவட்டம் – ஓ.பி.எஸ்ஸின் சொத்து விபரம்**

பெரியகோளம் ஒன்றியம்

1. லட்சுமிபுரம் தோம்பை பகுதியில் சுமார் 300 ஏக்கர் பரப்பில் தென்னந்தோப்பு



2. கைலாசநாதர் கோவில் பகுதியைச் சுற்றி 220 ஏக்கர் தென்னந்தோப்பு
3. தென்கரை பவளம் தியேட்டர் பக்கத்தில் அடுத்தவர் நிலத்தை அபகரித்து12 ஏக்கர் பரப்பில் தார்ரோடு போட்டு பிளாட் போடப்பட்டது
4. தென்கரை ஒர்க்சாப் தெருவில் பொதுப்பாதை, கண்மாய் வாய்க்கால் நிலம் மறித்து காம்பவுண்டு வால் ஆக்கிரமிப்பு
5. லட்சுமிபுரம் ரேணுகா வித்தியாலயா பள்ளிக்கு எதிர்ப்புறம் 18 ஏக்கர் தென்னந்தோப்பு
6. லட்சுமிபுரம் ரேணுகா வித்தியாலயா பள்ளி அருகில் 80 ஏக்கரில் பிளாட் போடப்பட்டது
7. லட்சுமிபுரம் குடிநீர் வாய்க்கால் நிலம் மறித்து பெரிய கிணறு அமைத்து விவசாயிகள் பாதிக்கப்பட்டது
8. பவளம் தியேட்டர் பக்கத்தில் 20 கோடி அளவில் பலமாடி அடுக்கு குடியிருப்பு
9. போடி தொகுதியில் முத்தல் பகுதியில் சுமார் 500 ஏக்கர் பண்ணைத் தோட்டம்
10.பல்லடம் பகுதியில் Wind Mill Unit 540 நம்பர், அதன் மதிப்பு 7,200 கோடி
11. திருப்பூர், திருமுருகன் பூண்டி Spinning Kniting Mill சுமார் 500 கோடி
12.தேவதானப்பட்டி மேரிமாதா காலேஜ் பின்னால் 140 ஏக்கர் பண்ணைத் தோட்டம்
13.தேவதானப்பட்டி குவாரி எதிர்ப்புறத்தில் சுமார் 20 ஏக்கரில் பிளாட்
14.தேவதானப்பட்டி மஞ்சளாறுப் பகுதியில் தென்னை மற்றும் வாழை மொத்தம் 57 ஏக்கர்
15.திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டியில் 140 ஏக்கர் பண்ணைத் தோட்டம்
16.பெரியகுளம் நகரில் தெற்கு அக்ரஹாரம் வடக்கு அக்ரஹாரம் தெரு முழுவதையும் ஆக்கிரமிப்பு
17.தேனியில் போஜராஜ் மில் சுமார் 140 கோடியில் 2015ல் வாங்கியது
18.பெரியகுளம் பகுதியில் சுமார் 30 கோடியில் பங்களா

பினாமிகள்:

1. லட்சுமிபுரம் பாப்பா பில்டர்ஸ், லட்சுமிபுரம் கிருஸ்ணா பில்டர்ஸ் பெயரில் தமிழ்நாடு முழுவதும் ரூ.1,000 கோடி சொத்து மற்றும் அரச ஒப்பந்தங்கள்
2. தேனி K.M.C. Communication பெயரில் சுமார் 5,000 கோடியில் சொத்து
3. தேனி CBM பில்டர்ஸ் பெயரில் சுமார் 1,000 கோடியில் ஒப்பந்தப் பணிகள்

எங்களுக்குத் தெரிந்த அளவே இவ்வளவு என்றால், தெரியாமல் எவ்வளவோ?

# சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும், சிறீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான உறவுகள் வலுப்படும்!

**அ**ண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுவின் சர்வதேசப் பிரிவின் உதவி அமைச்சர் ஹோ யேசௌ (Guo Yezhou) முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும், சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்களையும் சந்தித்து விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

அப் பேச்சுவார்த்தைகளின் போது மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் சீன – இலங்கை உறவுகள் உச்சநிலையை அடைந்ததை சீனப் பிரதிநிதி நினைவு கூர்ந்தார். எதிர்காலத்தில் தமது இரு கட்சிகளுக்கிடையிலான உவுகளைப் பலப்படுத்துவதற்காக தொடர்ச்சியான பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சித்தர்கள் அருளிய யோகாசனம்

தமிழ் மருத்துவ முறையில் கற்பம் மருந்துகள் முதன்மையானது. இது சித்தர்களால் கண்டுபிடிக்கப்பட்டவை. கற்பம் என்பது உடம்பினை நோயுறாதபடி நல்ல நிலையில் வைத்திருந்து நரை, திரை, மூப்பு இவற்றையும் பிணியினையும் நீக்கும். உடம்பின் மேன்மையை நன்குணர்ந்த சித்தர்கள் நரை, திரை, மூப்பு அறியா நல்லுடலைப் பெற்றவர்கள்.

மனிதன் இல்லறத்தானாயினும் துறவறத்தானாயினும் உடலைப் பேணுதல் முதன்மையானது. இதனைத் திருமூலர் தம் திருமந்திரத்தில் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்.

**உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திறம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.**


உடலைக் காப்பது கற்பம். இது உடலைக் கல்லைப் போலாக்கும். கல்லினால் செய்த சிலை பன்னெடுங்காலமானாலும் நரை, திரை, மூப்பு, பிணி அடைவதில்லை. கற்பம் உண்டால் காயம் அழியாது என்கிறார் திருமூலர்.

கற்பம் பொது, சிறப்பு என இருவகைப்படும். பொதுக் கற்பம் உடலைக் காத்து, மேனிக்கு எழிலும் பலமும் தந்து நரை, திரை, சாக்காடு வராமல் தடுக்கும். சிறப்புக் கற்பம் உடல் உறுப்புகளிலாவது உடல் முற்றுமாவது கண்ட பிணியை நீக்கி உடலுக்கு வலிமை தந்து பலம் ஊட்டும்.

பொது, சிறப்பு என்று பிரித்துக் கூறப்பட்ட கற்பத்துள் மூலிகை, தாது, சீவப்பொருள், அவிழ்தங்களும், மேலும் உடலைக் காக்கும் யோகாசனப் பயிற்சிகளும் பிராணாயாமம் என்று சொல்லப்படும் மூச்சுப் பயிற்சியும், யோகம், முப்புவும் அடங்கும். யோகாசனத்தாலும், மூச்சுப் பயிற்சியாலும் பிராணாயமத்தாலும் உடல் கற்பமாகும் என்கின்றனர் சித்தர்கள்.

**யோகாசனம்**

சிவயோகம் என்னும் இராஜ யோகம் பண்ணுங் காலத்துச் சித்தாசனம் என்னும்



ஆசனமும், இல்லறத்தாருக்கு அவர்கள் வாயுதாரனை என்னும் உயிர்ப்பு பண்ணும் காலத்து பத்மாசனமும் சிறந்ததென்று அட்டாங்க யோக நூல்கள் கூறுகின்றன.
பொதுவாக ஆசனங்கள் யாவும் உடற்பயிற்சி போன்றவையே. என்றாலும் ஆசனங்கள் உடற்பயிற்சிகளிலிருந்து செயலிலும் நிலையிலும் வேறுபடுகின்றன. பொதுவான உடற்பயிற்சிகள் உடலின் மேற்புறமுள்ள உடல் தாதுக்களையே வலிமைப்படுத்துகின்றன. ஆனால் யோக இருக்கை என்னும் ஆசனங்கள் உடலின் உள்உறுப்புகளை வலிமைப்படுத்துகின்றன.

ஆசனங்கள் தொகையால் எண்ணற்றன. இதனைத் திருமூலர் 'பல் ஆசனம்', 'எண்ணிலா ஆசனம்' என்று குறிப்பிடுவதால் அறியலாம். இருப்பினும் இவற்றுள் இன்று ஒரு சில ஆசனங்களே நடைமுறையில் உள்ளன. திருமூலர் தம் தமிழ் மூவாயிரத்தில் பதுமாசனம், பத்திராசனம், குக்குடாசனம், சிங்காசனம், சொத்திராசனம், வீராசனம், கோமுகாசனம் என்ற சிலவற்றை மட்டுமே கூறியுள்ளார். இதில் பத்திரம், வீரம், பதுமம், கோமுகம், குக்குடம் ஆகிய ஐந்து ஆசனங்களுமே ஞான சாதனைக்கு உரிய ஆசனங்களாகும்.

**ஆசனப் பலன்**

யோகாசனப் பயிற்சியினால் உடல் உள்ளுறுப்புகள் பலம் அடைகின்றன. உடலில் வீணான சதைப் பிடிப்புகள் உண்டாவதில்லை. உடல் அழகுடன் திகழ்ந்து நோயின்றியும் வலுவுடனும் விளங்கும். உடல் முழுமைக்கும் இரத்த ஓட்டத்தை உண்டாக்கும். சுறுசுறுப்பு, புத்தித் தெளிவு, நினைவாற்றல், மனத்தூய்மை முதலிய உண்டாகும். மேலும் உடலை நல்ல நிலையில் வைத்திருப்பதுடன் பிணிகள் உடலில் சேராதும் தடுக்கின்றன. வந்த பிணியை நீக்குகின்றன.

யோகாசனம் செய்ய மான் தோல், புலித்தோல், சித்திரக் கம்பளம், வெண் துகில், தருப்பை ஆகிய ஆசனங்கள் சிறந்த என்கின்றனர் சித்தர்கள். மேடு பள்ளம் இல்லாத சமதளத்தில் யோகாசனம் செய்ய வேண்டும். கூனுதல், குறுகுதல் தவிர்த்து நிமிர்ந்து நேராய் இருந்து ஆசனம் செய்ய வேண்டும். பயிற்சிகளை மெதுவாயும், நிதானமாயும் செய்ய வேண்டும்.

**கோபம் தவிர்**

பொதுவாக மனம் ஒரு நிலையில் இருப்பதில்லை. மனதை ஒருமைப்படுத்தும் எண்ணத்துடனேயே நம் முன்னோர்கள் இறைவழிபாடு, தவம் முதலியன செய்தனர். ஒவ்வொரு உடல் உறுப்புடனும் இணைக்கப்பட்டிருக்கும் நரம்பு உணர்ச்சிகளை மனம் சார்ந்து நிற்கிறது. அதனால்தான் அளவுக்கு மீறிய கோபம் ஏற்படும்போது கண் சிவந்து உடல் சூடேறுகிறது. கோபம் தணிந்ததும் களைப்பும் சோர்வும் ஏற்படுகின்றன. மனதில் மாற்றம் ஏற்பட்டால் உடலும் தளரும். ஒன்று வலிவு பெறும் போது மற்றதும் வலிவு பெறும். மனம் தூய்மையானால் அது உடலுக்குக் கேடு விளைவிப்பதில்லை. நன்மை உண்டாக்கும். உடலை நல்ல நிலையில் வைத்திருக்க மனத்தூய்மை வேண்டும். மனதால் உண்டாகும் காமம், வெகுளி, மயக்கம், அவா, துன்பம் ஆகியவை நீங்கின் உடலில் பிணி சேராது. இதனால்தான்,

**மனமது தூய்மை யானால்**
**மந்திரம் செபிக்க வேண்டாம்**

என்றனர் ஆன்றோர்.

நன்றி: செந்தில் வயல்

---

மக்கள் விடுதலைப் படை எப்பொழுதும் ஒரு போர்ப் படையாக விளங்குகின்றது. தேசிய ரீதியான வெற்றிக்கு பின்னர் கூட நமது நாட்டில் வர்க்கங்கள் ஒழிக்கப்படாத, உலகில் ஏகாதிபத்திய அமைப்பு இன்னும் இருக்கின்ற வரலாற்றுக் கட்டம் முழுதும் நமது படை ஒரு போர்படையாக திகழும். இந்த விஷயத்தில் தவறான புரிதலோ, அல்லது ஊசலாட்டமோ இருக்கக் கூடாது.

**-மா சே துங்**

# நீங்களும் தெரிந்து கொள்வதற்காக, அறிந்ததைப் பகிர்கின்றோம்!

## இலங்கை அரசியலில் அமெரிக்கா நேரடியாகத் தலையிடத் தயாராகிறா?

இலங்கை அரசியலில் அமெரிக்கா நேரடியாகத் தலையிடத் தயாராகி வருகிறதா என்ற சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் ஏற்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து வெளியாகும் 'தினக்குரல்' நாளேட்டில் ஒகஸ்ட் 5ஆம் திகதி வெளியான செய்தியொன்று இந்தச் சந்தேகத்தை வலுப்படுத்துவதாக உள்ளது.

"கோதா களமிறங்குவதைத் தடுக்க அமெரிக்கா இரகசிய நடவடிக்கை?" என்ற தலைப்பில் பிரசுரமான அந்தச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"பாதுகாப்பமைச்சின் முன்னாள் செயலாளர் கோதாபாய ராஜபக்ச களமிறங்குவதைத் தடுக்கும் வகையில் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தினூடாக இரகசிய நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்படுவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகமவை சந்தித்துள்ள அமெரிக்கத் தூதரக அலுவலகத்தின் பிரதானிகள் சிலர் முன்னாள் பாதுகாப்பு செயலாளருக்கு எதிராகக் காணப்படும் யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவரிடம் விசாரித்துள்ளனர். அதன்போது தூதரக அதிகாரிகள் கோதாபாய ராஜபக்ச 2020 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுப்பதற்காக அவரால் மேற்கொள்ளப்பட்டுள்ள யுத்தக் குற்றங்கள் தொடர்பான அறிக்கை தமக்கு அவசியமாக இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்."

•

## ஐ.நாவுக்கு 'உல்லாசப் பயணம்' போன செலவு 120 மில்லியன் ரூபா!

2016 இல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான இலங்கை அரசாங்க தூதுக்குழு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்ற செலவு 120 மில்லியன் (1 கோடி 20 இலட்சம்) ரூபாவுக்கும் அதிகம் என்ற விபரம் நாடாளுமன்றத்தில் வெளியாகி மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமைச்சர்கள், அதிகாரிகள் என 60 பேர் அடங்கிய தூதுக்குழு பயணம் மேற்கொண்டுள்ளது.

ஊதாரித்தனமாக செலவு செய்யப்பட்ட இந்தப் பணம் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட வரிப்பணமே என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. உலகின் பெரும் சக்தி வாய்ந்த நாடுகளான அமரிக்கா, சீனா, ரஸ்யா, இந்தியா போன்ற நாடுகள் கூட இவ்வளவு தொகையான ஆட்களைத் தமது தூதுக்குழுக்களில் ஐ.நாவுக்கு அனுப்பியிருப்பார்களோ என்பது சந்தேகமே.

சரி, அப்படிச் சென்றவர்கள் சர்வதேச அரங்குகளில் இலங்கைக்கு ஏதாவது நன்மை பயக்கும் காரியங்களைச் செய்கிறார்களோ என்றால் அதுவுமில்லை. மாறாக, உலக வல்லாதிக்க சக்திகள் இலங்கைக்கு எதிராக விரிக்கும் சதி வலைகளில் நமது நாட்டைச் சிக்க வைக்கவே துணை புரிகிறார்கள்.

ஒருபக்கத்தில் சாதாரண பொதுமக்களின் அத்தியாவசிய உணவு மற்றும் பொருட்களை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே, மறுபுறத்தில் ஆட்சியில் இருக்கும் ஒவ்வொரு அரசாங்கமும் பொதுமக்களின் வரிப்பணத்தில் உல்லாச வாழ்வு வாழ்வது இலங்கையில் தொடர்கதையாக நிகழ்ந்து வருகிறது. பொதுமக்கள் வீதியில் இறங்கிப் போராடாவிட்டால் நிச்சயமாக இப்படியான ஊதாரித்தனங்களுக்கு ஒருபோதும் முடிவு வராது.

•

## 'நல்லாட்சி' அரசின் இரட்டை வேடம்!

அண்மையில் ஈரானிய வெளிவிவகார அமைச்சர் Mohammad Javad Zarif இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார். அந்த விஜயத்தின் போது அவர் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், அரசின் உயர்மட்டத் தலைவர்களையும் சந்தித்து இரு நாடுகளினதும் இரு தரப்பு உறவுகள் குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இப் பேச்சுவார்த்தைகளின் போது, இலங்கை ஜனாதிபதியும், ஈரான் வெளிவிவகார அமைச்சரும் தற்போதைய உறவுகள் குறித்து திருப்தி வெளியிட்டதுடன், எதிர்காலத்தில் மேலும் உறவை வலுப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

ஈரானிய வெளிநாட்டு அமைச்சரின் இலங்கை விஜயம் பற்றிய செய்திகளுக்கு அந்நாட்டு ஊடகங்கள் பெரும் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டிருந்தன. ஆனால், இலங்கை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு உட்பட அரச ஊடகங்கள் ஈரானிய வெளிநாட்டமைச்சரின் இலங்கை விஜயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருட்டடிப்புச் செய்துள்ளன.

மத்திய கிழக்கில் ஈரானுக்கும், இஸ்ரேலிய சியோனிச அரசாங்கத்துக்கும் பெரும் பகை நிலவுவதும், இஸ்ரேலின் பிரதான பாதுகாவலரான அமெரிக்காவின் றம்ப் அரசாங்கம் முன்னைய ஜனாதிபதி ஒபாமா ஈரானுடன் செய்த உடன்படிக்கையை இரத்துச் செய்துவிட்டு, ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை இறுக்கியதுடன், அந்த நாட்டுடன் போர் முரசு கொட்டுவதுமான ஒரு சூழலில், இலங்கையின் வலதுசாரி அரசாங்கம் மேற்கத்தை நாடுகளைத் திருப்திப்படுத்துவதற்காக ஈரானிய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை வருகை பற்றிய செய்திகளை இருட்டடிப்புச் செய்துள்ளது என்பதே அரசியல் நோக்கர்களின் ஏகோபித்த கருத்தாகவுள்ளது.

•

## அமைச்சர்கள், எம்.பிகளின் சம்பளம் 215 சதவீதத்தால் அதிகரிப்பு!

இலங்கை அரசாங்க அமைச்சர்களினதும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் சம்பளத்தை அதிகரிப்பதற்கு 'நல்லாட்சி' அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதிகரிப்பென்றால் சும்மா அதிகரிப்பல்ல. 215 சதவீத அதிகரிப்பு!

இதன்படி, தற்போது 65,000 ரூபாவாக இருக்கும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் மாதாந்த சம்பளம் இனிமேல் 140,000 ரூபாவாக வழங்கப்படும்.

தற்போது 63,000 ரூபாவாக இருக்கும் பிரதி அமைச்சர்களுக்கான சம்பளம் இனிமேல் 135,000 ரூபாவாக இருக்கும்.

அதேபோல நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் 54,285 ரூபாவிலிருந்து 120,000 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

ஏற்னெவே சம்பளங்களுடன் 'கிம்பளங்களையும்' பெற்று வரும் அமைச்சர்களுக்கும், எம்.பிக்களுக்கும் அரசாங்கம் மேலதிகமாக இந்தப் பரிசையும் அளித்துள்ளது.

ஆனால் அரசாங்க அல்லது தனியார்துறை ஊழியர்கள் சொற்ப சம்பளவுயர்வு கேட்டுப் போராடினால் கிடைப்பதோ கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் குண்டாந்தடிப் பிரயோகமும்தான்.

நாடாளுமன்ற அதிர்ஸ்ட இலாப சீட்டில் பரிசு பெற்றுள்ள சகல ஆளும் எதிர்கட்சி மற்றும் அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்!

•

# இலங்கையும் மாலைதீவும் முக்கியமான கேந்திரத்தில் உள்ளன!

## –அமெரிக்காவின் புதிய துதுவர் தெரிவிப்பு

இலங்கையும் மாலைதீவும் ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்புக்கும், செழிப்புக்கும் முக்கியமானவையாகும். இந்த இரு நாடுகளும் ஹோமுஸ் மற்றும் மலாக்கா நீரிணைகளை இணைக்கும் கடல்வழிப் பாதையில் முக்கியமான கேந்திர நிலையங்களில் அமைந்துள்ளன என இலங்கை, மாலைதீவு நாடுகளுக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமெரிக்க தூதுவர் Alaina Teplitz அம்மையார் தெரிவித்திருக்கிறார். (இவர் தற்போது நேபாளத்தில் அமெரிக்காவின் தூதுவராகக் கடமையாற்றி வருகின்றார்)

வொசிங்டன் நகரில் அமெரிக்காவின் வெளியுறவுகள் சம்பந்தமான செனட் குழுவின் முன் சாட்சியமளித்த அவர், முக்கியமான கடல்வழிப் பாதைகளில் சுதந்திரமாகப் பயணம் மேற்கொள்வது அமெரிக்காவின் பொருளாதார மற்றும் பாதுகாப்பு நலன்களுக்கு முக்கியமானது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

புதிய அமெரிக்கத் தூதுவரின் கருத்து, இலங்கையில் அமெரிக்கா ஏன் இத்தனை கரிசனை கொண்டுள்ளது என்பதை மீண்டுமொருமுறை எடுத்துக் காட்டியுள்ளது.

# சரிந்து கொண்டிருக்கும் த.தே.கூ. வாக்கு வங்கி

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கி வீழ்ச்சியடைந்து செல்வதை பின்வரும் புள்ளிவிரபங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்:

2013 இல் நடந்த மாகாண சபைத் தேர்தல்களில் அது பெற்ற வாக்கு வீதம்
யாழ்ப்பாண மாவட்டம் - 84 வீதம்
மட்டக்களப்பு மாவட்டம் - 50 வீதம்

2015 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அது பெற்ற வாக்கு வீதம்
யாழ்ப்பாண மாவட்டம் - 65 வீதம்
மட்டக்களப்பு மாவட்டம் - 53 வீதம்

2018 இல் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அது பெற்ற வாக்கு வீதம்
யாழ்ப்பாண மாவட்டம் - 35 வீதம்
மட்டக்களப்பு மாவட்டம் - 28 வீதம்
கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைதான்!

நடைபெறப் போகும் மாகாண சபைத் தேர்தலின் போது சற்றுப் பலமாக அசைத்தால் 'வீடு' சரியாமலா விடும்.

•

# ஆகாயத்தாமரை

ஆகாயத்தாமரை எப்பொழுதும் நீரிலே காணப்படுகிறது. இதனால் நமக்கு பயன் இல்லை என்று நினைக்காதீர்கள். இதன் இலைகளில் இருக்கும் மருத்துவ குணங்கள் நமக்கு கொடுக்கும் நன்மைகள் ஏராளம்.

**கண் குறைபாடு:** கண்களில் ஏற்படும் குறைபாடுகளை போக்க உதவும் ஆகாயத்தாமரை மிகவும் பயன் அளிக்க கூடியது. ஆகாயத்தாமரையின் இலைகளை காய்ச்சி அதனுடன் சந்தனதூள், வெட்டிவேர், கஸ்தூரி மஞ்சள், சாம்பிராணி சேர்த்துக் கொதிக்க விட்டு சிறிது நல்லெண்ணெய் சேர்த்து கொள்ளுங்கள். சூடு தணிந்த பிறகு தினமும் காலை, மாலை இரு வேளைகளிலும் தலையில் தேய்த்து வர உடல் சூடு தணிந்து கண் எரிச்சல் குணமாகும்.

***சீதபேதி:*** இதனால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகாயத்தாமரையின் இலைகளை அரைத்து அதன் சாற்றுடன் தேன் அல்லது கருப்பட்டி, வெல்லம் கலந்து குடிக்க கிருமிகள் அழிந்து நன்மை பயக்கும்.

**காயங்கள்:** தோல் நோய்கள் மற்றும் காயங்களை குணப்படுத்த ஆகாயத்தாமரையின் இலைகளின் சாற்றினை காயம் இருக்கும் இடத்தில் வைத்து கட்ட வேண்டும். இதனை தொடர்ந்து பயன்படுத்த புண்கள் விரைவில் குணம் ஆகும்.

**மூல நோய்:** ஆகாயத்தாமரையின் இலைகளின் சாற்றினை பயன்படுத்த மூல நோய்கள் தீரும்.
இனி ஆகாயத்தாமரையை பயனற்றது என்று எண்ணாமல் மேற்கூறியவற்றைத் தெரிந்து பயன்படுத்தி பயனை பெறுங்கள்.

•

# நாடக உலகில் எம்.ஆர். ராதாவின் புரட்சி பயணம்

நாடகங்கள் பொழுதுபோக்குக்காக அல்ல. அவை மக்களின் உணர்வுகளை, உணர்ச்சிகளை, சிந்தனைகளைத் தூண்டுவதற்குப் பயன்பட வேண்டும் என்பதில்மிக உறுதியாக இருந்தார் எம்.ஆர்.ராதா. மூடப்பழக்க வழக்கங்களையும் பழைய கந்தல் புராணங்களையும் வெளிச்சமிட்டு அவற்றை எவ்வாறு ஒதுக்கிப் புறந்தள்ள வேண்டும் என்பதை எடுத்துச் சொன்னவர் அவர். இதற்காக 27 முறை அவர் சிறை சென்று இருக்கிறார் என்கிற தகவல் அனைவருக்கும்புதிதாகவே இருக்கும். நாடகத்தின் திரைச்சீலையில் "உலகப் பாட்டாளிகளே ஒன்று சேருங்கள்" என்கிற வாசகத்தை நிரந்தரமாக வைத்திருந்தார் என்பது அவருடைய சமத்துவத்திற்கும் சமூகமாற்றத்திற்குமான சிந்தனையின் விளைவாகக் காணலாம்.

அவருடைய நாடகத்தை இராமாயணம் என்றுதான் நடத்தினார். ஆனால் இராமாயணத்தை மறுத்து நடத்தப்பட்டதால் தினத்தந்தி நாளிதழ் அதை கீமாயணம் என்று குறைகூறி விமர்சித்து எழுதியது. அதுவே பின்னர் எம்.ஆர்.ராதா கீமாயணம் நடத்தினார் என்று வரலாற்று ஏடுகளில் பதிவாகிவிட்டது. அந்த நாடகம் தொடர்பான வழக்கில் தானே ஆஜராகிவாதாடிய எம்.ஆர்.ராதா வெவ்வேறு வகையான 23 இராமாயண நூல்களை நாடக மேடையிலேயே அடுக்கி வைத்திருப்பாராம். இராமாயணம் சம்பந்தமான வழக்கு நீதிமன்றத்தில் வந்தபோது தாம் எந்தெந்த இராமாயணத்தை ஆதாரமாகக்கொண்டு இந்தக் காட்சிகளை அமைத்திருக்கிறேன் என்பதை நீதிபதியிடமே எடுத்துரைத்தாராம். நீதிபதியே வியந்து இத்தனை இராமாயணங்கள் இருக்கின்றனவா? அப்படி இருக்கிறபோது இவருடைய இராமாயண நாடகத்தை எப்படித் தடைசெய்ய முடியும் என்று கேட்டு ராதா குற்றமற்றவர் என்று விடுதலைசெய்துவிட்டாராம். அந்த அளவிற்கு விஷயஞானமும் வாதத்திறமையும் மிகுந்தவர் எம்.ஆர்.ராதா.

# லூலா: பிரேசில் பேசும் ஒரே பெயர்

பிரேசிலின் க்யூரிடிபா நகரின் 15 சதுர மீட்டர் அளவிலான ஒரு சிறை அறையில் காத்திருக்கிறார் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா (Luiz Inácio Lula da Silva). பிரேசில் அதிபராக (2003–2011) இருந்தபோது, அவரே திறந்துவைத்த சிறைச்சாலை அது. 'ஆபரேஷன் கார் வாஷ்' என்று அழைக்கப்படும் ஊழல் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட அவர், இந்த வழக்கில் தீர்ப்பளிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த நிலையில், அவரை விடுவிக்கலாமா வேண்டாமா என்பது குறித்து கடந்த சில நாட்களுக்கு முன்னர் நீதிபதிகளிடையே பெரும் விவாதம் நடந்தது. இது தொடர்பாக, பிரேசில் முழுவதும் வாட்ஸ்அப் குறுஞ்செய்திகள் பரவலாகப் பரிமாறிக்கொள்ளப்பட்டன. இறுதியில், லூலா சிறையிலேயே இருக்க நேர்ந்தது.

அக்டோபர் 7–ல் அதிபர் தேர்தலைச் சந்திக்கவிருக்கிறது பிரேசில். தொழிலாளர் கட்சியின் சார்பில் அதிபர் வேட்பாளர் லூலாதான். அவரைத் தவிர வேறு வேட்பாளர் கிடையாது என்று உறுதியாக நிற்கிறது அக்கட்சி. லூலாவைத் தேர்தலில் போட்டியிட அனுமதிப்பது தொடர்பாக, ஆகஸ்ட் மாதவாக்கில் தேர்தல்கள் தொடர்பான நீதிமன்றம் முடிவெடுக்கவிருக்கிறது. 2018–ல் நடந்த ஒவ்வொரு தேர்தலும் வலதுசாரி வேட்பாளரான ஜேய்ர் போல்சோனாரோவைவிட லூலா முன்னணியில் இருப்பதைக் காட்டுகின்றன.




### மக்களின் அதிபர்

லூலாவின் ஆட்சி சமூக ஜனநாயக ஆட்சியாக இருந்தது. பிரேசிலின் பொருளாதாரம் மந்தமாக இருந்த சமயத்தில், ஏற்றுமதிப் பொருட்களின் விலை அதிகரித்தது பொருளாதாரத்துக்குப் பலனளித்தது. பொது நிதியில் கணிசமான தொகையை, வறுமையை எதிர்கொள்வதிலும், கல்வி வாய்ப்புகளை அதிகரிப்பதிலும் பயன்படுத்தினார் லூலா. இந்தத் திட்டங்களால் சமூகரீதியில் சிறுபான்மையாக இருந்த மக்கள் பலனடைந்தனர். பிரேசிலின் முக்கியப் பிரச்சினையான பட்டினி ஒழிக்கப்பட்டது. நம்பிக்கையளிக்கும் விதத்தில் சில மத்திய பல்கலைக்கழகங்கள் திறக்கப்பட்டன.

2007–08 கடன் நெருக்கடி ஏற்பட்ட நிலையில், பிரேசிலின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட கொந்தளிப்பான சூழல் அந்நாட்டின் பணக்காரர்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. லூலாவுக்குப் பின்னர் அதிபரான தில்மா ரூசெஃப் (2011–2016), அந்த நெருக்கடியின் பாதிப்புகளை எதிர்கொள்ள நேர்ந்தது. பணக்காரர்கள், தொழிலதிபர்களின் பதற்றத்தைத் தணிக்கும் நடவடிக்கைகளில் தில்மா இறங்கியபோது, தொழிலாளர் கட்சியில் அவருக்கு ஆதரவு குறையத் தொடங்கியது. 2018 வரை நீடிக்க வேண்டிய அவரது ஆட்சி, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே முடிவுக்குவந்தது.

2018 வரை காத்திருந்தால், தாங்கள் மீண்டும் தோற்கடிக்கப்பட்டுவிடுவோம் என்று அஞ்சிய மேல்தட்டு வர்க்கத்தினர், தில்மா தலைமையிலான சமூக ஜனநாயக அரசை வீழ்த்த வேண்டும் என்று முடிவுசெய்தனர். வீதிகளில் இறங்கிப் போராடிய அவர்கள், ஆட்சி மாற்றம் வேண்டும் என்று கோரினர். தில்மா பதவியிலிருந்து அகற்றப்பட்டு, மிச்சேல் தெமர் அதிபராக்கப்பட்டார். மேல்தட்டு வர்க்கத்தினர் இவரை ஏற்றுக்கொண்டனர். இதையடுத்து, இயற்கை வளங்களைச் சுரண்டுவது, தொழிலாளர் சட்டங்களைப் புறக்கணிப்பது, அரசுக் கருவூலத்துக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் நிதிப் பரிமாற்றங்களை மேற்கொள்வது என்று மேல்தட்டு மக்கள் இறங்கினர்.

### ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள்

அற்பமான சான்றுகளின் அடிப்படையில், லூலா குற்றவாளியாக்கப்பட்டு, ஏப்ரல் மாதம் சிறையில் அடைக்கப்பட்டார். அவருக்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லை என்று மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த சிலரே ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், அதை வெளிப்படையாகச் சொல்ல அவர்கள் விரும்பவில்லை. பிரேசில் அரசியல் களத்திலிருந்து லூலா அகற்றப்படுவது தங்களுக்குப் பலனளிக்கும் என்று கருதும் மூத்த அரசியல் தலைவர்கள் மவுனம் காக்கிறார்கள்.

மேல்தட்டு வர்க்கத்தினர் தங்கள் அசுத்தமான அரசியல் உலகத்துக்குள் நீதித் துறையை இழுத்திருக்கிறார்கள். ஆனால், அரசியல் உலகத்துக்குள் மீண்டும் நுழையும் எண்ணம் பிரேசில் ராணுவத்துக்கு இல்லை. ராணுவ உயரதிகாரிகளை ராணுவ ஆட்சி ஊழல்மயமாக்கிவிட்டது என்றும், ராணுவத்தின் நம்பிக்கையைச் சிதைத்துவிட்டது என்றும் சர்வாதிகாரியாக இருந்த ஜெனரல் எர்னஸ்டோ கீஸெல் கூறியது குறிப்பிடத்தக்கது.

### ஆபத்தில் நீதித் துறை

இந்தச் சூழலில் நீதித் துறை ஒட்டுமொத்தமாக அரசியல்மயமாகும் நிலை உருவாகியிருக்கிறது. சமீபத்தில்,

நீதிபதிகள் பொதுவெளியில் சர்ச்சையில் ஈடுபட்ட சம்பவமும், நீதிபதிகளின் உத்தரவைச் செயல்படுத்த காவல் துறை அதிகாரிகள் மறுத்த சம்பவமும் நடந்திருக்கின்றன. லூலாவின் ஆட்கொணர்வு மனு நிராகரிக்கப்பட்டது தொடர்பாக சில மாகாணங்களின் ஆளுநர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். அதேபோல், நீதித் துறை ஊழல்மயமாகிவிட்டதாகச் சில வழக்கறிஞர்கள் அறிக்கை வெளியிட்டனர்.

பிரேசிலின் நீதித் துறையில் ஏற்பட்டிருக்கும் இந்தப் பிரச்சினை தொடர்பாக அந்நாட்டின் தேசிய நீதி கவுன்சில் விசாரணையைத் தொடங்கியிருக்கிறது. எனினும், இந்த விசாரணை அறிக்கையால், நீதித் துறைப் புரையோடிப்போயிருக்கும் நிலைக்குத் தீர்வு காண வாய்ப்பில்லை என்றே தெரிகிறது. ஜூலை மாத இறுதியில், பிரேசிலின் பிரபலமான அரசியல் தலைவர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் 11 பேர், லூலாவை விடுவிக்கக் கோரி காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவிருக்கிறார்கள். இதே கோரிக்கையை வலியுறுத்தி ஆகஸ்ட் 10–ல் வர்த்தக சங்கங்கள் பொது வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருக்கின்றன. சுமார் நான்கு லட்சம் விவசாயிகள், பிரேசிலின் பல்வேறு பகுதிகளிலிருந்து தலைநகரை நோக்கிப் பேரணி நடத்தவிருக்கிறார்கள். இசைக் கலைஞர்களும் இசை நிகழ்ச்சிகள் நடத்தவிருக்கிறார்கள். மக்களின் மனநிலை தெளிவாக உணர்த்துவது இதைத்தான்: 'திரும்பி வாருங்கள் லூலா, நெருக்கடி முற்றிவிட்டது, ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்கிறது!'

### பெருகும் ஆதரவு

தேர்தலில் லூலா போட்டியிடுவதற்கு நீதிமன்றங்கள் அனுமதிக்காது என்றே தெரிகிறது என சுட்டிக்காட்டுகிறார் பேராசிரியர் போமார். எனினும், இது வலதுசாரிகளுக்கு சாதகமாக அமையும் என்றும் சொல்ல முடியாது. சமீபகாலமாக, 'சதி முகாம்' என்று அழைக்கப்படும் வலதுசாரித் தலைவர்களுக்கு இடையே ஏற்பட்டிருக்கும் பிளவுகள், போல்சோனாரோ மீதான அவர்களின் அவநம்பிக்கை ஆகியவை வேறு சில சமிக்ஞைகளை உணர்த்துகின்றன. லூலா, தனக்குப் பதிலாக, தொழிலாளர் கட்சியின் தலைவர் க்ளெய்சி ஹாஃப்மேனைத் தேர்தலில் போட்டியிட வைக்கலாம் அல்லது தேர்தலைப் புறக்கணிக்கக் கோரலாம் என்கிறார் போமார். அக்டோபரில் தேர்தல் நடக்கவிருக்கும் நிலையில் அதுவரை இந்தக் குழப்பம் நீடிக்கும் என்கிறார் அவர்.

சிறையில், பத்திரிகையாளர்களைச் சந்திப்பதற்கு லூலாவுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தாலும் ட்விட்டர் பதிவுகள் எழுதுவதற்கும், பார்வையாளர்களைச் சந்திக்கவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த வாரம், "பிரேசிலின் ஏழை மக்கள் படும் துயரம் கொந்தளிப்பை ஏற்படுத்துகிறது" என்று ட்வீட் செய்திருந்தார் லூலா. #'ரெகாடோடூலூலா' (லூலாவின் செய்தி) எனும் ஹேஷ்டேக் சமீபகாலமாகப் பிரபலம். இன்னொரு ஹேஷ்டேக் இன்னும் பிரபலம். அது 'மஸாவோ' (நான் உங்களை நேசிக்கிறேன்). அது குறிப்பது லூலாவைத்தான்!

**–விஜய் பிரசாத், தி இந்து (ஆங்கிலம்)**
**தமிழில் சுருக்கமாக: வெ.சந்திரமோகன்**

# மு.கருணாநிதி மரணம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், ஐந்துமுறை தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தவருமான மு.கருணாநிதி தமது 94ஆவது வயதில் காலமானார்.

பன்முக ஆற்றல் கொண்ட கருணாநிதி, தி.மு.கவின் ஸ்தாபகத் தலைவர் சி.என்.அண்ணாத்துரை மரணித்த பின், பல சவால்களுக்கு மத்தியில் சுமார் அரை நூற்றாண்டு காலம் தி.மு.கவை கட்டிக்காத்தவர் ஆவார்.

திருவாரூர் மாவட்திலுள்ள திருக்குவளை என்ற கிராமத்தில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த கருணாநிதி தனது அயராத முயற்சியால் தனது குடும்பத்தை ஆலமரம் போன்ற விருட்சமாக வளர்த்ததுடன், ஆசியாவின் முன்னணிப் பணக்காரக் குடும்பங்களில் ஒன்றாக வளர்த்த பெருமைக்கும் உரியவராவார்.

**ரொறன்ரோ தமிழ்ச்சங்கம்**

***கார்ல் மார்க்ஸ்: 200 ஆவது பிறந்த தின***

## நினைவுக் கருத்தரங்கு

***பிரதம பேச்சாளர் உரை:***

"21 ஆம் நூற்றாண்டில் மார்க்சிசத்தின் பிரயோகம்" — தோழர் டேவ் மெக்கி - Dave McKee (கனடிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்ராறியோ மாகாணத் தலைவர்)

***சிறப்புப் பேச்சாளர்கள் உரைகள்:***

"உலகப் பொருளாதார நெருக்கடி குறித்த கார்ல் மார்க்சின் எதிர்வு கூறல்கள்" — தோழர் க.தவபாலன் (முன்னைநாள் தொழிற்சங்க செயற்பாட்டாளர்)

"மார்க்சியமும் கலாச்சாரமும்" - தோழர் எஸ்.பாலசுப்பிரமணியம்

*ஐயந்தெளிதல் அரங்கு*

**நாள்:** 25-08-2018
**நேரம்:** மாலை 3:00 முதல் 7:00 வரை
இடம்: ரொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபம்
Unit 7, 5633, Finch avenue East,
Scarborough.
M1B 5k9
(Dr. Lambotharan's Clinic - Basement)

தொடர்புகளுக்கு: அகில் - 416-822-6316

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம், அனுமதி இலவசம்***

# தெற்கு அரசியல் குறித்து சம்பந்தனின் ஆச்சரியமும், அவர் எதிர்நோக்கும் அதே சவாலும்!



**அ**ண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், உத்தியோகபூர்வ எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் ஆச்சரியத்துடன் கூடிய முக்கியமான கேள்வியொன்றை நாடாளுமன்றத்தில் எழுப்பியிருக்கிறார்.

அதாவது, 1950களில் காலஞ்சென்ற எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவினால் உருவாக்கப்பட்டு, பின்னர் பல தலைவர்களினால் வழிநடத்தப்பட்டு, பல தடவைகள் நாட்டை ஆட்சி செய்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியை இல்லாமல் செய்துவிட்டு, சில மாதங்களுக்கு முன்னரே உருவாக்கப்பட்ட சிறீலங்கா பொதுஜன பெரமுன எப்படி முன்னுக்கு வர முடிந்தது என்பதே அக்கேள்வியாகும்.

சம்பந்தனின் கேள்வி முக்கியமானதொன்று என்பதில் சந்தேகம் இல்லை. ஏனெனில், இலங்கையின் வரலாற்றிலும் சரி, ஏனைய தென்னாசிய நாடுகளின் வரலாற்றிலும் சரி, அதாவது பிரித்தானிய வெஸ்ற்மினிஸ்ரர் முறையிலான இருகட்சி ஆட்சிமுறை நிலவும் இந்த நாடுகளில், இப்படியான ஒரு மாற்றம் நடந்ததாக வரலாறு இல்லை. இலங்கையிலேயே முதன்முறையாக இவ்வாறானதொரு மாற்றம் நிகழ்ந்துள்ளது.

ஆனால், இந்த மாற்றம் ஏன் நிகழ்ந்தது என ஆச்சிரியப்படுவதற்கு எதுவுமில்லை. மார்க்சிய வழி நின்று மட்டுமல்லாது, பொதுவாகவே இம்மாற்றத்துக்கான காரணத்தை ஆராய்ந்தால் அதில் அதிசயிப்பதற்கு எதுவுமில்லை என்பதைக் காணலாம். அதுவுமில்லாமல், சம்பந்தன் போன்றவர்கள் களமாடும் தமிழ் அரசியல் அரங்கிலும் அத்தகையதொரு மாற்றம் நிகழ்ந்து வருகிறது என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

இதற்கு முன்னரும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் சில உடைவுகள் ஏற்பட்டுள்ளன. அதில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு உடைவு என்றால், சந்திரிகவின் கணவரான விஜயகுமாரதுங்க சுதந்திரக் கட்சியிலிருந்த சிலரை பிரித்துச் சென்று சிறீலங்கா மக்கள் கட்சியை அமைத்த சம்பவத்தைக் குறிப்பிடலாம். ஆனால், விஜயகுமாரதுங்க ஜே.வி.பியினால் கொலை செய்யப்பட்ட காரணத்தாலும், சில அரசியல் சூழ்நிலைகளாலும் அக்கட்சி பின்னர் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது.

சுப்பராயன்

இப்படியான ஒரு சூழ்நிலையில் 2015 ஜனவரி 8இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் முதல் தடவையாக பாரிய பிளவு ஒன்று ஏற்பட்டது. அந்தப் பிளவுக்கான காரணகர்த்தாக்கள், முன்னாள் பிதமர்களான சிறீ.ல.சு.கவை ஸ்தாபித்த பண்டாரநாயக்கவினதும், பின்னர் அதை வழிநடத்திய அவரது துணைவியார் சிறீமாவோ பண்டாரநாயக்கவினதும், புதல்வியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிக குமாரதுங்கவும், அந்தக் கட்சியின் பொதுச் செயலாளராக நீண்டகாலம் இருந்தவரும் தற்போதைய ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவும் ஆவர்.

இவர்கள் இருவரும் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளினதும், உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளினதும் சதிக்கு இரையாகி, சுதந்திரக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளான ஏகாதிபத்திய – எதிர்ப்பு, நாட்டின் தேசிய சுதந்திரத்தையும் இறையாண்மையையும் பாதுகாத்தல் என்பனவற்றைக் கைவிட்டு, படு பிற்போக்கான ஏகாதிபத்திய சார்பு வலதுசாரிக் கட்சியும், சுதந்திரக் கட்சியின் பரம வைரியுமான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து 2015 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டதுடன், பின்னர் அக்கட்சியுடன் இணைந்து ‘நல்லாட்சி’ என்ற பெயரில் மக்கள் விரோத, தேசத்துரோக அரசாங்கமொன்றையும் அமைத்தனர்.

அதன் மூலம், என்ன காரணத்துக்காக பண்டாரநாயக்க ஐ.தே.கவிலிருந்து விலகி வந்து நாட்டு மக்களின் நன்மை கருதி சிறீ.ல.சு.கவை ஸ்தாபித்தாரோ, அந்த நோக்கங்களை சந்திரிகவும், மைத்திரியும் குழிதோண்டிப் புதைத்தனர். இந்தத் துரோக நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அவர்கள் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களிடமோ, அந்தக் கட்சியை ஆதரிக்கும் இலட்சோப இலட்சம் மக்களிடமோ அனுமதியையும் பெற்றிருக்கவில்லை.

இந்த நிலைமையில் பண்டாரநாயக்கவின் உண்மையான கொள்கைகளைப் பாதுகாப்பதற்காக உள்கட்சிப் போராட்டம் நடத்திய உண்மையான கட்சி அங்கத்தவர்களை, மைத்திரி ஜனாதிபதி பதவியைப் பயன்படுத்திக் கைப்பற்றிய சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தைப் பயன்படுத்தி அடக்கியொடுக்கினார், ஓரம் கட்டினார்.

உள்கட்சி ஜனநாயகம் ஒழிக்கப்பட்டு, மைத்திரி – சந்திரிக தலைமையிலான ஒரு சிறு குழுவின் சர்வாதிகாரம் தலைதூக்கிய நிலையிலேயே, சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த 54 நாடாளுமன்ற

உறுப்பினர்கள் கட்சியை விட்டு வெளியேறி தனியாக இயங்கியதுடன், அவர்களில் ஒரு சாரார் 'சிறீலங்கா பொதுஜன பெரமுன' என்ற பெயரில் புதிய கட்சியொன்றையும் அமைத்தனர். இந்த இரு நிகழ்வுகளிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பூரண ஒத்துழைப்பு இருந்தது.

"கூட்டு எதிரணி" என்ற பெயரில் செயல்படத் தொடங்கிய ஐ.ம.சு.கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 54 பேரின் நடவடிக்கைகளையும், புதிதாக உருவான சிறீ.ல.பொ.பெரமுனவின் நடவடிக்கைகளையும், நாட்டு மக்கள் உன்னிப்பாக அவதானித்து வந்தனர். அதேநேரத்தில் ஜனாதிபதி மைத்திரியினதும், அவர் தலைமையிலான ஐ.தே.க. – சிறீ.ல.சு.க. கூட்டு அரசாங்கத்தினது நடவடிக்கைகளையும் மக்கள் அவதானித்தும் வந்தனர்.

மக்கள் இரு தரப்பினரதும் நடவடிக்கைகளை அவதானித்தது மட்டுமின்றி, தமது அவதானிப்பின் அடிப்படையில் சரியான ஒரு முடிவுக்கும் வந்துள்ளனர். அவர்களது அவதானிப்பின்படி, கூட்டு எதிரணியும், சிறீ.ல.பொ.பெரமுனவுமே பண்டாரநாயக்க உருவாக்கிய சிறீ.ல.சு.கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை முன்னெடுத்து வருகின்றன என்ற தெளிவான முடிவுக்கு வந்தனர். எனவே மக்கள், ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான சிறீ.ல.சு.கவை நிராகரித்துவிட்டு, கூட்டு எதிரணிக்கும், சிறீ.ல.பொ.பெரமுனவுக்கும் தமது ஆதரவை வழங்கத் தொடங்கினர்.

முதலில் கூட்டு எதிரணியினர் நடத்திய கூட்டங்களுக்கு இலட்சக்கணக்கில் திரண்டதன் மூலம் மக்கள் தமது ஆதவை வெளிப்படுத்தினர். பின்னர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைபெற்ற தேர்தல்களில் கூட்டு எதிரணியை வெற்றியீட்ட வைத்ததின் மூலம் தமது ஆதரவை வெளிப்படுத்தினர். பின்னர் இவ்வருடம் பெப்ருவரியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் சிறீ.ல.பொ.பெரமுனவை அமோக வெற்றியீட்ட வைத்ததன் மூலம் தமது ஏகோபித்த ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். மக்களின் இந்தத் தீர்ப்பு எதிர்காலத்தில் நடைபெறும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் எந்த அணி வெற்றியீட்டும் என்பதைக் கட்டியம் கூறி நிற்கிறது.

இதிலிருந்து ஒரு விடயம் தெளிவாகின்றது. அதாவது, சதி சூழ்ச்சிகளின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுபவர்களையும், மக்களுக்குச் சார்பான அடிப்படைக் கொள்கைகளை மீறுபவர்களையும் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதே அது.

இதுதான் இலங்கை அரசியலில் நடந்தது. இந்த விடயம் "பழுத்த அரசியல்வாதி", "முதிர்ந்த இராஜதந்திரி", "சாணக்கியர்" என்றெல்லாம் வர்ணிக்கப்படும் சம்பந்தன் "ஐயா" அவர்களுக்குத் தெரியாமல் போனது ஆச்சரியம் அளிக்கும் விடயம். அல்லது வழமைபோல தெரிந்தும் தெரியாதது போல நாடகம் ஆடுகின்றாரோ தெரியவில்லை.

இது ஒருபுறமிருக்க, இந்த அரசியல் மாற்றம் தெற்கில் மட்டும் நடக்கவில்லை. வடக்கு கிழக்கில் தமிழர் அரசியலிலும் நடக்கிறது. அது எப்படியென்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

தமிழ் அரசியல் தலைமை தமிழீழத் தீர்மானத்தை முன்வைப்பதற்கு முன்னால், பரம வைரிகளாக இருந்த தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகள் ஒன்றிணைந்து, அத்துடன் தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரசையும் இணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்றொரு அமைப்பை உருவாக்கினர். தமிழீழக் கொள்கையை ஏற்காத தொண்டமான் கூட்டணியிலிருந்து ஒருசில நாட்களிலேயே வெளியேறிச் சென்றுவிட்டார். காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தாம் உயிருடன் இருக்கும்வரை கூட்டணியின் நடவடிக்கைகளில் ஒருபோதும் பங்கேற்கவில்லை.

பொன்னம்பலத்தின் மரணத்தின் பின் அவரது மகன் குமார் பொன்னம்பலம் கூட்டணியுடன் முரண்பட்டுக் கொண்டு காங்கிரஸ் கட்சியை தனியே கொண்டு சென்றுவிட்டார். குமாரின் மரணத்தின் பின் கட்சியின் தலைமையைப் பொறுப்பேற்ற அவரது மகன் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை விட்டுத் தனியாகவே செயற்படுகின்றார்.

அதுமாத்திரமின்றி, கூட்டணியின் தலைவரான வீ.ஆனந்தசங்கரி கூட்டணியின் உத்தியோகபூர்வ நாமத்தைக் கொண்டு சென்றுவிட்டார். புலிகளால் தமது தேவை கருதி உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியியும் தனியாகப் பிரிந்து சென்றுவிட்டது. மீதமிருக்கும் புளொட், ரெலோ என்பனவும் தமிழரசுக் கட்சியுடன் மல்லுக்கட்டலில் ஈடுபட்டுள்ளன. கூட்டமைப்பு தலைமையால் நியமிக்கப்பட்ட வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும் தனிவழி செல்ல ஆரம்பித்துவிட்டார்.

இவ்வளவு பிரச்சினைகள் நடந்தும் மக்கள் கூட்டமைப்புக்கே வாக்களித்து வந்துள்ளனர். அதற்குக் காரணம் தமிழ் தலைமை செய்து வந்த அரச எதிர்ப்பு அரசியல் ஆகும். ஆனால் முதல் தடவையாக கூட்டமைப்புத் தலைமை தற்போதைய அரசின் பங்காளிக் கட்சி போலச் செயற்படுகிறது. அதன் செயற்பாடுகளை தமிழ் தேசியவாதிகள் மட்டுமின்றி, கணிசமான தமிழ் மக்களும் எதிர்க்கின்றனர். அந்த எதிர்ப்பை மக்கள் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் வெளிப்படுத்தி இருக்கின்றனர்.

1965இலும் தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகள் டட்லி சேனநாயக்க தலைமையிலான அப்போதைய ஐ.தே.க. அரசில் இணைந்திருந்தனர். அதற்கான தமது எதிர்ப்பை தமிழ் மக்கள் 1970இல் நடைபெற்ற தேர்தலில் பிரமாண்டமான முறையில் வெளிப்படுத்தினர். அது போன்றதொரு நிலை அடுத்த பொதுத் தேர்தலில் நிச்சயம் கூட்டமைப்புக்கு ஏற்படும்.

சம்பந்தன் சிறீ.ல.சு.கவுக்கு ஏற்பட்ட நிலை குறித்து ஆச்சரியப்படுவதைவிட, தனது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்காலத்தில் ஏற்படப் போகும் நிலை குறித்து கவனம் செலுத்துவது நல்லது. ஏனெனில் அவரது இருக்கைக்கு கீழே நெருப்பு பற்றியெரியத் தொடங்கிவிட்டது.

அதாவது, தற்பொழுது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான சக்திகள் அனைத்தும் சரியாக ஒருங்கிணைக்கப்பட்டால், வடக்கு கிழக்கிலும் ஒரு 'தமிழ் பொதுஜன பெரமுன' உருவாவதற்கான வாய்ப்பு உண்டு.

---

எல்லா வேலைகளிலும் கட்டளைவாதம் (Commandism) என்பது தவறானது, காரணம், பொது மக்களின் அரசியல், உணர்வு மட்டத்தைத் தாண்டி, சுயமான மக்கள்திரள் நடவடிக்கை என்ற கோட்பாட்டை அத்துமீறி சிந்திக்காமல் செயலாற்றும் நோயை அது பிரதிபலிக்கிறது. நமது தோழர்கள் தாம் புரிந்து கொள்ளும் எல்லாவற்றையும் பரந்துபட்ட மக்களும் புரிந்து கொள்வர் என்று எண்ணிவிடக் கூடாது. மக்கள் அதைப் புரிந்து கொண்டார்களா, இல்லையா. அவர்கள் நடவடிக்கைக்குத் தயாராய் இருக்கின்றார்களா, இல்லையா என்பதை அவர்கள் மத்தியில் சென்று பரிசீலனைகள் நடத்துவதன் மூலம் தான் அறியமுடியும்.

**–மா சே துங்**

**முன்பக்கத் தொடர்ச்சி...**

பார்த்தார்கள். அப்படி நடத்திய தேர்தல்கள் எல்லாவற்றிலுமே அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் இரண்டும் படுதோல்வியடைந்தன.

அதன் காரணமாக உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தப் பயந்து, இரண்டரை வருடங்களாக இழுத்தடித்து, பின்னர் தவிர்க்க இயலாத சூழலில் தேர்தலை நடத்தினார்கள். அத்தேர்தலில் முன்னரிலும் பார்க்கப் படுமோசமாகத் தோல்வியைத் தழுவினார்கள். அதன் காரணமாகவே இப்பொழுது மாகாண சபைத் தேர்தல்களை நடத்தப் பயந்து இழுத்தடித்து வருகின்றனர். இதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் எப்பொழுது தேர்தல் நடத்தினாலும் அரசாங்க கட்சிகள் இரண்டும் படுதோல்வியடையும் என்பதும், வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தவிர இதர ஏழு மாகாணங்களிலும் கூட்டு எதிரணி அமோக வெற்றி பெறும் என்பதும் நிதர்சனமான உண்மை.

இது ஒருபுறமிருக்க, மாகாண சபைத் தேர்தல்களை – குறிப்பாக கிழக்கு மற்றும் வடக்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாது இழுத்தடிப்பதில் தமிழ் அரசியல் தலைமைக்கும் இரகசியமான முறையில் விருப்பம் உண்டு. வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வட மாகாணத்தின் ஆயுள்காலத்தை நீடிக்கும்படி கோரி அரசாங்கத்தை இரகசியமாக அணுகியதாக சில மாதங்களுக்கு முன்னர் ஒரு தகவல் வெளியானது. இதுவும் தேர்தல் பயத்தின் காரணமாகத்தான். விக்னேஸ்வரனுடன் முரண்பாடு இருந்தாலும், தமது முரண்பாடு அம்பலத்துக்கு வருவதைத் தவிர்ப்பதற்கும், சில வேளைகளில் தேர்தலில் பின்னடைவு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கும், சம்பந்தன் குழுவினருக்கும் இதில் உடன்பாடு உண்டு.

தற்போதைய சூழலில் வட மாகாண சபைத் தேர்தல் நடந்தால் (மேற்கத்தைய, இந்தியத் தரப்புகள் தலையிடாமல் இருந்தால்) சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு அணியாகவும், விக்னேஸ்வரன் தலைமையிலான இன்னொரு அணி தனியாகவும் களமிறங்கக்கூடிய சூழல் உண்டு. இதில் ஏதாவது ஒரு தரப்பு வெற்றி பெற்றாலும் கூட, பிற்போக்கு தமிழ் தேசியவாத சக்திகள் பலவீனமடையும் என்பது நிச்சயம். அதனால், பிரிந்து நிற்பது தமிழ் தேசிய நலன்களுக்கு பாதகம் என்று சொல்லி (தமிழ் தேசிய நலன்கள் என்பது தமிழ் மக்களின் நலன்கள் அல்ல, மாறாக தமிழ் மக்கள் மத்தியிலுள்ள அற்ப தொகையான பிற்போக்கு இனவாத மேட்டுக் குழாமினரின் நலன்கள் என்று அர்த்தம் கொள்க), உள் – வெளி சக்திகள் இவர்களை ஒன்றிணைந்து போட்டியிட வைக்கவே முயற்சிகள் நிகழும் என்பதும் உண்மை.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை, அங்கு தமிழ் மக்களை விட, முஸ்லீம் – சிங்கள மக்களின் கூட்டு எண்ணிக்கை அதிகம் என்பதால், அங்கு தமிழ் பிரிதிநிதித்துவத்தைப் பாதுகாக்க கட்சி வேறுபாடின்றி அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து போட்டியிட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. இது எவ்வளவு தூரம் வெற்றி பெறும் என்பது ஒருபுறமிருக்க, இது சரியான அணுகுமுறையா என்ற கேள்வியும் இருக்கின்றது.

ஏனெனில், கிழக்கு மாகாணம் மூவின மக்களும் வாழ்கின்ற பிரதேசம் என்ற யதார்த்தம் அங்கு உள்ளது. இந்த நிலைமையில் தேசியக் கட்சிகள் மூவின மக்களையும் உள்வாங்கி அரசியல் செய்கையில், இன (தமிழ் – முஸ்லிம்) அடிப்படையிலான கட்சிகள் தனித்து அரசியல் செய்வது சரியா, பயன் தருமா என்ற கேள்வி எழுகின்றது. இங்கும் கூட மக்களை ஏமாற்றவே இன அடிப்படையிலான கோசம் முன் வைக்கப்படுகின்றது.

ஏனெனில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு வழமைபோல தமிழ் தேசியவாதம் பேசி கடந்த தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று வெற்றிபெற்ற பின்னர் என்ன செய்கிறது? தமிழ் தேசியத்தைக் கைவிட்டுவிட்டு, மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளால் இலங்கையில் நிறுவப்பட்ட வலதுசாரி அரசாங்கத்தைப் பாதுகாக்க எவ்வித நிபந்தனையுமின்றி அரசாங்கத்தை ஆதரித்து வருகின்றது.

முஸ்லிம் கட்சிகளைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. முஸ்லிம் காங்கிரஸ் உட்பட அனைத்து முஸ்லிம் கட்சிகளும் இஸ்லாமிய தேசியவாதத்தை முன்னிறுத்தி தேர்தலில் வெற்றி பெற்றாலும், பின்னர் பதவிக்கு வரும் எந்த அரசாங்கமாக இருந்தாலும் அவற்றுடன் இணைந்துவிடும் வழக்கத்தைக் கொண்டுள்ளன.

எனவே உண்மை என்னவென்றால், தமிழ் – முஸ்லிம் தலைமைகள் தத்தமது தேசியவாதத்தை முன்னிறுத்தி அரசியல் செய்தாலும், அவர்கள் அந்த இனங்களில் உள்ள ஏகப் பெரும்பான்மையான மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கவில்லை. அந்த இனங்களிலுள்ள ஒரு குறிப்பிட்ட வரக்கத்தின் நலன்களைப் பாதுகாப்பதற்காக முழு மக்களினதும் பிரதிநிதிகள் போல் நடித்துவிட்டு, பின்னர் சிங்கள முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ இணைந்து விடுவர். இதுதான் ஆண்டாண்டு காலமாக நடந்து வருகிறது. மக்கள் இதை விளங்கிக் கொள்ளாமல் தொடர்ந்து ஏமாந்து வருகின்றனர்.

குறிப்பாக, இலங்கைத் தமிழ் மக்கள் இந்த விடயத்தில் வடிகட்டின முட்டாள்களாகவே தொடர்ந்து இருந்து வருகின்றனர். ஏனெனில், தென்னிலங்கையில் மாற்றங்கள் நிகழ்ந்தாலும், தமிழ் மக்களைப் பொறுத்தவரை "சுற்றிச் சுற்றி சுப்பற்றை கொல்லைக்குள்ளே"தான் நின்று உழல்கின்றனர்.

முன்பு தமிழரசு – தமிழ் காங்கிரஸ் என்ற ஒரே வர்க்க, ஒரே அரசியலின் இரண்டு பிரிவுகளுடனும் 'கன்னை' பிரிந்து நின்றனர். இப்பொழுது சம்பந்தன் அணி - விக்னேஸ்வரன் அணி என்ற அதே விதமான இரண்டு அணிகளுக்கிடையிலும் கன்னை பிரிந்து நிற்கின்றனர். இங்கேதான் தமிழ் மக்கள் மீண்டும் தவறு விடுகின்றனர்.

அதாவது, சம்பந்தன் அணி – விக்னேஸ்வரன் அணி என்பது அரசியல் ரீதியாக வெவ்வேறானவை அல்ல. இரண்டினதும் அரசியல் அடிப்படை ஒன்றுதான். அதாவது, இரண்டுமே பிற்போக்கு தமிழ் தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்டவை. இரண்டினதும் சமூக அடிப்படை யாழ்.மையவாத, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ, உயர்சாதி மேட்டுக்குழாமினர்தான். இவர்கள் இருவருமே ஏகாதிபத்திய விசுவாசிகள். இப்பொழுது இவர்களுக்கிடையில் உள்ள முரண்பாடு சம்பந்தன் குழு அரசாங்கத்தை ஆதரிக்கின்து, விக்னேஸ்வரன் குழு எதிர்க்கின்றது என்பதுதான்.

இது தற்காலிகமானது. நாளைக்கே தேர்தல் நடந்து கூட்டு எதிரணி

ஆட்சிக்கு வந்தால் (பெரும்பாலும் அதற்கான வாய்ப்புகள்தான் உண்டு), சமபந்தன் அணி அரச எதிர்ப்பாளர்களாக மாறும். அப்பொழுது சம்பந்தன் அணிக்கும், விக்னேஸ்வரன் அணிக்கும் இடையில் இப்பொழுது நிலவுகின்ற ஒரேயொரு முரண்பாடும் அகன்றுவிடும். விக்னேஸ்வரன் இப்பொழுது சம்பந்தன் அணியை எதிர்ப்பது, தமிழ் அரசியல் அதிகார பீடத்தில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி, தமிழ் மக்களினதோ, தமிழ் தேசியத்தினதோ நலன்களுக்காக அல்ல. ஆனால் அதற்காக தமிழ் தேசியவாதம் பற்றி உரக்கக்கூவி மக்களை ஏமாற்றுகிறார்.

இந்த நிலைமையில், தமிழ் மக்களின் அரசியல் போக்கில் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டுள்ளது. இதை வரப்போகும் மாகாண சபைத் தேர்தலில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். அதற்கான ஒரு நல்ல சூழல் தோன்றியுள்ளது. அதிகாரப் போட்டி காரணமாக சம்பந்தன் – விக்னேஸ்வரன் குழுவினரிடையே தோன்றியுள்ள முரண்பாடு அதற்கான வாய்ப்பைத் திறந்துவிட்டுள்ளது. அதைப் பயன்படுத்த வேண்டியது தமிழ் மக்கள் மத்தியிலுள்ள உண்மையான மாற்று சக்திகளின் கடமையாகும்.

இதற்கு முதலில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்று விக்னேஸ்வரன் அணிதான் என்ற மாயையை மக்கள் மத்தியில் உடைத்தெறிய வேண்டும். அவர்கள் இருவரும் ஒருவரேதான். உண்மையான மாற்று, தமிழ் மக்கள் மத்தியிலுள்ள ஜனநாயக – முற்போக்கு சக்திகள்தான் என்பதை நிரூபிக்க வேண்டும். நிரூபிப்பதன் மூலமே மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். (இதற்கு ஒரு உதாரணம் – சிங்கள மக்களிடையே ஐ.தே.கவின் பாரம்பரிய எதிரி சிறீ.ல.சு.க. தான் என்ற நிலை இருந்தது. ஆனால் சிங்கள ஜனநாயக – முற்போக்கு சக்திகள் சரியான முறையில் வேலை செய்ததின் மூலம், ஐ.தே.கவுக்கு மாற்று சிறீலங்கா பொதுஜன பெரமுன தான் என்ற இமாலய சாதனையை நிகழ்த்தியுள்ளனர்) அதற்கான முதல் பணியாக, கடந்த காலத்தில் ஏற்பட்ட வேண்டத்தகாத, கசப்பான சிறுசிறு முரண்பாடுகளை ஒருபக்கம் தூக்கி வீசிவிட்டு, தமிழ் மக்கள் மத்தியிலுள்ள உண்மையான ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகள் (கட்சிகள்) ஒன்றிணைந்து ஒரு பரந்துபட்ட முனினணியைத் தோற்றுவிக்க வேண்டும். இதை வடக்கு கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தலிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். அதன் மூலம் உலகம் மாறினாலும், தமிழ் மக்களின் பிற்போக்குத் தலைமை ஒருபோதும் மாறாது என்ற சூத்திரத்தைப் பொய்யாக்க வேண்டும்.

இது சாதிக்க முடியாதது அல்ல. எல்லா ஜனநாயக – முற்போக்கு சக்திகளும் மனது வைத்தால் இந்த அற்புதத்தை நிகழ்த்த முடியும். இதற்கான பொன்னான வாய்ப்பு – குறிப்பாக வட மாகாணத்தில் இப்பொழுது உருவாகியுள்ளது. அதைப் பற்றிப் பிடிப்பது நம் எல்லோரினதும் கடமை.

# கியூப அனுபவங்கள் பற்றிய கலந்துரையாடல்

கியூபாவுக்கு மலிவான கட்டணத்தில் ஒருவார விடுமுறைச் சுற்றுலா சென்று வருவது கனடியர்களிடையே நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இந்த வாய்ப்பை பல வருடங்களுக்கே முன்பே கனடியர்களுக்கு ஏற்படுத்தித் தந்தவர் தற்போதைய கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடேவின் தந்தையான முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற பியரே ரூடே (Pierre Trudeau) அவர்கள் ஆவார். அவர் கியூபாவில் 1959இல் ஃபிடல் கஸ்ட்ரோவின் தலைமையில் புரட்சி வெற்றி பெற்ற பின்னர் ஏனைய மேற்கு நாடுகளின் எதிர்ப்பையும் மீறி முதலில் இராஜதந்திர உறவுகளை வைத்த மேன்மைக்குரியவர்.

அவர் செய்த மகத்தான செயலால் இன்று பல்லாயிரக்கணக்கான கனடியர்கள் வருடந்தோறும் கியூபாவுக்கு பயணம் செய்து உல்லாசமாகவும், பாதுகாப்பாகவும் (ஏனைய தென்னமரிக்க நாடுகளில் இங்கு இருப்பது போன்ற 100 வீத பாதுகாப்பு கிடையாது) ஒய்வைக் கழிப்பது மாத்திரமின்றி, அந்நாட்டின் சோசலிச சமூக அமைப்பின் மேன்மையான வாழ்வையும் நேரடியாகக் கண்டு வருகின்றனர். அப்படிச் சென்று வருபவர்களில் கனடாவில் வாழும் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவர்களும் பல நூற்றுக்கணக்கில் அடங்குகின்றனர்.



Elizabeth Hill

இத்தகையவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் கலந்துரையாடல் ஒன்று யூலை 29ஆம் திகதி கனடாவின் ஸ்காபரோ நகரில் அமைந்துள்ள Don Montgomery Community Recreation Centre மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கனடா – கியூபா நட்புறவுச் சங்கத்தின் தலைவி Elizabeth Hill அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்வுக்கு தோழர் சண்முகம் சுப்பிரமணியம் தலைமை வகித்தார். இக்கலந்துரையாடலை மாதாமாதம் பயனுள்ள நிகழ்வுகளை ஏற்பாடு செய்து வரும் 'ஆக்கபூர்வ சிந்தனை மற்றும் செயற்பாட்டிற்கான அமையம்' ஏற்பாடு செய்திருந்தது.

---

உங்களுக்குப் புரியாத அல்லது தெரியாத விசயங்கள் பற்றி உங்களுக்கு கீழ் உள்ளவர்களிடம் கேளுங்கள். உங்களுடைய அங்கீகாரத்தையோ அல்லது நிராகரிப்பையோ, இலேசாக தெரிவிக்கக் கூடாது… நமக்கு தெரியாதவற்றை தெரிந்தது போல் நடக்ககூடாது. நாம் "கீழே உள்ளவர்களிடம் இருந்து கேட்டுப் படிப்பதற்கு வெட்கப்படக் கூடாது" கீழ் மட்டங்களிலுள்ள ஊழியர்களின் கருத்துகளை நாம் கவனமாக கேட்க வேண்டும். நீங்கள் ஆசிரியனாவதற்கு முன், மாணவராய் இருங்கள். நீங்கள் உத்தரவுகள் இடுவதற்கு முன் கீழ் மட்ட ஊழியர்களிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும்… கீழ் மட்ட ஊழியர்கள் கூறுவது சரியாக இருக்கலாம் அல்லது பிழையாக இருக்கலாம். கேட்டு, நாம் அவற்றை ஆராய வேண்டும். நாம் சரியான கருத்துககளில் கவனம் செலுத்தி, அவற்றின்படி செயற்பட வேண்டும்… கீழிருந்து வரும் தவறான கருத்துகளையும் நாம் கேட்க வேண்டும். அவற்றை முற்றாகக் கேளாமல் விடுவது தவறு. ஆனால் அவற்றின்படி செயற்படக் கூடாது. மாறாக, அவற்றை விமர்சனம் செய்ய வேண்டும்.

**–மா சே துங்**

# அரசியல் அமைப்பை உருவாக்குவது முடியாத காரியம்!

## *அமைச்சர் மனோ கணேசன் கூறுகிறார்!!*

**பு**திய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவது வெறும் கனவாகவே போய்விடும் என்று தெவித்துள்ள தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், அரசாங்கம் அதற்கான நேரத்தை இழந்துவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய சமாதானப் பேரவை கொழும்பில் ஏற்பாடு செய்த கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய அவர், “நல்லாட்சி அரசாங்கம் பதவியேற்று ஒரு வருடத்துக்குள் அந்தப் பணியை நிறைவேற்றியிருக்க முடியும். எனினும் பல்வேறு அரசியல் குழப்பங்கள், முரண்பாடுகளால் அதனைச் செய்ய முடியவில்லை. தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் சுமார் மூன்றரை வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இன்னும் எஞ்சியிருக்கும் ஒன்றரை வருட காலத்தில் புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்கி நிறைவேற்றுவது இயலாத காரியம். அரசாங்கம் ஏற்கெனவே அதற்கான நேரத்தை இழந்துவிட்டது” என்று குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் மனோ கணேசனின் மேற்படி கூற்றிலிருந்து இரண்டு விடயங்கள் தெளிவாகின்றன.

ஒன்று, அரசாங்கம் நினைத்திருந்தால் பதவிக்கு வந்தவுடனேயே புதிய அரசியலமைப்பை உருவாக்கி நாட்டிலுள்ள சில பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டிருக்க முடியும். ஆனால் ‘நல்லாட்சி’ அரசாங்கம் வேண்டுமென்றே திட்டமிட்டு அதைத் தவிர்த்து வந்திருக்கிறது.

இரண்டாவது, ‘அரசியல் சாணக்கியர்’ இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு இந்த அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்காது என்பது நன்கு தெரிந்திருந்தும் வேண்டுமென்றே, “புதிய அரசியலமைப்பு அந்தா வருகிறது, இந்தா வருகிறது” என தமிழ் மக்களை ஏமாற்றி வந்திருக்கிறது, தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறது.



இந்த விடயத்தில் மக்களை ஏமாற்றிய அரசாங்கத்தையும், தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் குற்றம் சொல்லிப் பயனில்லை. அவர்கள் இருவரையும் அரியணை ஏற்றிய மக்களை நொந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

# “மோதிப் பார்க்கலாம்”

## ஊடகமொன்றுக்கு அமைச்சர் பொன்சேக சவால்!

‘**ஆ**மிக்காரன்’ அரசியலுக்கு வந்தால் எப்படி இருக்கும் என்பதை முன்னாள் இராணுவத் தளபதியும், ‘நல்லாட்சி’ அமைச்சர்களில் ஒருவருமான சரத் பொன்சேக நிரூபித்திருக்கிறார்.

போதைவஸ்துக் கடத்தலில் சம்பந்தப்பட்டிருக்கும் சில முக்கிய புள்ளிகளுடன் பொன்சேக தொடர்பு வைத்திருக்கிறார் என்றும், அவர்களைப் பாதுகாத்து வருகிறார் என்றும் அண்மையில் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்தக் குற்றச்சாட்டை பொன்சேக மறுத்தாலும், இதில் உண்மை இருப்பதாக சில சிரேஸ்ட பொலிஸ் அதிகாரிகளே கூறியிருக்கின்றனர்.

இந்த நிலையில் இது சம்பந்தமான செய்தியொன்றை ஒலிபரப்பிய தனியார் வானொலி ஒன்றை பொன்சேக மிரட்டியிருப்பதாக மேலும் ஒரு குற்றச்சாட்டு அவர் மீது எழுந்துள்ளது. “மோதிப் பார்க்கலாம், என்ன நடக்குமெனப் பார்போம்” என அந்த வானொலியை மிரட்டிய பொன்சேக, குறித்த வானொலி தன்னிடம் மன்னிப்பு கேட்கவேண்டும் எனவும் எச்சரித்துள்ளார்.

பொன்சேகவின் மிரட்டல் சம்பந்தமாக கண்டனம் தெவித்துள்ள ஊடகவியலாளர்களின் சர்வதேச கூட்டமைப்பு, அரசாங்கம் இலங்கையில் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. பொன்சேகவின் அச்சுறுத்தலை இலங்கை சுதந்திர ஊடக அமைப்பும் (Free Media Movement) வன்மையாகக் கண்டனம் செய்துள்ளது.

‘நல்லாட்சி’ அரசாங்கத்தில் ஊடக சுதந்திரம் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தலைவர்கள் பீற்றிவரும் நிலையில், அமைச்சர் ஒருவரே அரசாங்கத்தின் பீற்றலுக்கு சவால் விட்டுள்ளதையே பொன்சேகவின் அச்சுறுத்தல் பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டுகிறது.

